1244

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைபாக்கம், சென்னை.

12 DEC 1932

Vol 5.] 1932 ஹு டிசம்பர் மீ 1௳ [No. 47

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 921
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 923
3. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 2-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 925
4. நவாலி அட்டகிரிச் செவ்வேள் மாலை
நவாலி. க. சோமசுந்தரம் பிள்ளை 927
5. குடிவாழ்க்கை (Plato's Republic)
K. இராஜகோபால் 928
6. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 929
7. பொதிகைநிகண்டு (ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி)
S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 932
8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 933
9. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 5. களம் 5)
ஷேக்ஸ்பியர் நாடகம் 935
10. வர்த்தமானம் 939

கலாநிலயம்

அறிவில்லாத் திறமை 5.

இத்துணையும் இயம்பியபின்னும், எண்ணினர் எண்ணகப்படாத தன்மையாம் அக்கடவுளைக் காட்டவியலாது என்பதே எஞ்சுகின்றதாதலும், அதனால், கடவுளென்னுங் கருத்தையே கழித்துவிடுதலே கடனென்னும் உலோகாயதர் யாதும்பெருமையடைந்தவர்களாகார். அறிவிற் கெட்டாத்தன்மையே அப்பரம்பொருளின் இலக்கணம் என்று நம் இந்தியநாட்டுப்பெரியோர் இயம்பியுள்ள வண்ணம் மேனாட்டினுஞ் சிலர் முடிவுகண்டிருக்கின்றனர். மானுட அறிவு எத்தூரம் செல்லவல்லது என்பதை, ஜர்மனிதேயத்துச் சிந்தனையாளர் இம்மானுயல் காண்ட் (Immanuel Kant) என்பவர் மிகமிக நுணுகி ஆராய்ந்து நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன்னர் வரைந்திருக்கின்ற ஒரு அரும்பெரும் நூல், முன் சென்றவர் சித்தாந்தங்களை எல்லாம் சோதிக்குமொரு கட்டளைக்கல்லாகியும் பின்வருபவர் சிந்தனைகளுக்கெல்லாம் வித்தாகவும் நிற்கின்றது. அந்நூலின் ஆராய்ச்சிநுண்மை நினையவும் அரியதென்னின் அதன் முடிவினை நுனித்துரைக்க வல்லவர் மிகச்சிலரே. ஆயினும், "மானுட அறிவு ஓர் எல்லைவரையிலுந்தான் எட்டும், அதன்மேல், எத்துணை எத்துணை முயலினும் எட்டமாட்டாது; எனினும், எட்டமாட்டாமையாலேயே, அதற்கு மப்புறம் எய்துதற்கோர் பொருள் இல்லையென்று எண்ணல் பிழை. அறிவினிற்கு அடங்காத சில காரணங்கள் நமது உள்ளுணர்விற் சுரக்கக்கூடும். அவ்வுள்ளுணர்வினிற்குரிய பொருளே கடவுள்" என்பது காண்ட் என்பவர்தம் முற்றியமுடிபு எனக் கூறலாம். உள்ளுணர்வு ஒருவனுக்கு உபதேசிப்பதெல்லாம் "உன்னுடைய கடமை, அல்லது தர்மத்தை நீ செய்" என்பதொன்றே யாம். அந்தத் தர்மசிந்தனை தூண்டப்பெறுவதற்கு ஒருபொருள் ஆதாரமாயிருத்தல்வேண்டுமென்றும் அப்பொருள்தான் கடவுள் என்றும் காண்ட் வற்புறுத்தினர். ஆயினும் என்! வில் ட்யூராண்ட் என்னுமோர் தற்கால அறிஞர் மனமுளைந்து கூறுவதுபோல்

"After a century of Kant's ethics, we find ourselves in a welter of urban sensualism and immorality-of ruthless individualism untempered with democratic conscience or aristocratic honor; and perhaps the day will soon come when a dis-integrating civilization will welcome again the Kantian call to duty."

என்று நாமும் இங்கிருந்து எதிர்பார்க்கின்றவர்களாகின்றோம். "மேனாடுகளைப் பாருங்கள், அங்கிருப்பவர்கள் எவ்வளவு முன்னேற்றமடைந்தவர்களாயிருக்கின்றனர். அரசியல் கல்வி வர்த்தகம் கைத்தொழில் விடுதலை முதலியவைகளை நாமும் அவர்களைப்போல் அடைந்து முன்னேற வேண்டாவோ" என்று, ஒன்றையும் உய்த்துணரும் வகையற்றவர்களாய்ச் சொற்றொடர் ஆரவாரங்கள் செய்பவர்களுக்கு இதுபோன்ற மேனாட்டறிஞர் வாசகங்கள் ஏற்ற மாற்றாகும். இது இடைப்பிறவரல்; இனிக் கடவுளின்பால் மீள்வோம்.

மனிதர் சமயப்பற்றுடையவராயிருத்தற்குக் கடவுள் நம்பிக்கை இன்றியமையா ஆதாரமாதலின், அக்கடவுளைப்பற்றி ஆராய்ந்த சில அறிஞர்களின் கொள்கைகள்எவ்வண்ணம்அமைந்திருக்கின்றனவென்பதை இதுகாறுங் காட்டிவந்தோம். சமயங் கடந்த அப்பொருளை விண்டவர் கண்டிலர் என்பதை இது ஒருவாறு காட்டுவதுடன், கண்டுரைப்பதற்கியலாதென்பதையும்

188182

அவரே தெரிவிக்கின்றனர். எனினும் கண்டவர் சிலர் விண்டிலாமையும் இயலு மென்பதை மறத்தலாகாது. விண்டிலாதார் சிலர் தம் வாழ்க்கையாலும் செய்கையாலும் கடவுட்காட்சியைத் தெரிவித்திருக்கின்றனர். அப்பர் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகர் நம்மாழ்வார் முதலியோர், கண்டனர், விண்டிலர். இவ்வாறு நாம் உரைப்பதுபற்றி வியப்பொன்றுங் கொள்ளவேண்டா. தாம் கண்டுகொண்ட அக் கடவுட்காட்சியால் அகமுருகி உணர்வுருகி உவகையோடு தாமுமுருகுகின்ற அப் பெரியோர் தாம் கண்ட காட்சியை விண்டுரைக்க மாட்டாமல், கண்ட ஞானக்கண்ணிற்குத் தம் மனமும், மனத்திற்கு நாவும் பின்னிடுவதைப் பலவாறாக விளம்பி, மற்று "யாம் கண்டதனைய நீவிரும்காணவம்மின்; பணிமின், தொழுமின், ஒரு நாள் காண்பீர்; நீங்களே கண்டாலல்லது அப்பொருளை நான்.என் என்கோ" எனச் சாற்றுகின்றனர். இன்னோர், தாமொரு காணற்கரிய காட்சியைக் கண்டிருக்கின்ற நினைவின் உண்மையால் பேசுகின்ற பெற்றியர். கண்ணப்பர், திருநாளைப் போவார் அனைய சீரியோர், கடவுட்காட்சியைத் தாங்கள் பெற்றிருந்த வாய்மையையும் ஓராத தூய்மையைத் தாங்கியவர்களாதலால், விண்டுரைக்க வேண்டுமெனும் நினைவுங் கொண்டிலர்.

இன்னவாறு விண்டுரைக்கமாட்டாததும் வேண்டாததுமாயவொன்று இருத்தலுங்கூடும் என்னும் எண்ணம் உறுதிப்படுமாயின் சமயப்பற்றுடைய வாழ்க்கைக்குச் செவ்விய வித்திட்டாகிவிட்டது என்னலாம். இது, செவியால் கேட்டும் கண்ணாற் பார்த்தும் மூக்கால் முகர்ந்தும் நாக்காற் சுவைத்தும் கையால் தொட்டும் சோதித்தறியக்கூடிய விடயமொன்றன்று; மனத்தின் பயிற்சியால் எய்தவேண்டியதோர் நிலை. ஏ, "மனமே, ஒன்றன் உருவமும் குணமுந் தொழிலும் மற்ற இலக்கணங்களும் எவையென்று ஒருநாளும் தெரிந்துகொள்ளமாட்டாய் எனினும் அன்னதொன்று இருப்பது மெய்—இதனைச்சார்ந்து நீ விவகரிப்பாய்" என்று எத்துணை வற்புறுத்திச் சொன்னாலும் பண்படா ஒரு மனது அதனை ஏற்பது எங்ஙனம்? உடற்பயிற்சியில்லாமல் ஒருநூறு இராத்தல் கல்லினைத் தம் கையால் எடுத்தற்கியலாதென்பதை எளிதில்தெளிந்துகொள்ளவல்லமக்கள், யாதும் பயிலாதமனதை ஒரு சொல்லால் மாற்றிவிடலாம்என்றெண்ணி விவகரிப்பதால்போகும் மோசம் பெரிதுடைத்து இவ்வுலகம். புலன்களால்அறியக்கூடியதுங்கூட ஒருபோது, இன்னதன்மைத்தென்று இலக்கணங் கூறி உரைக்கமாட்டாததாய் முடியலாமென்று ஓர் உதாரணங் காட்டி, அன்னதேயாம் உணர்வினால் உவக்கவல்லதாய் நிற்கின்ற கடவுளின் மெய்ம்மையும் என்றவப் பெரிய உண்மையை எளிய வகையில் விளக்குபவராய், அறிவும் திறமையும் வாய்ந்த கம்பர்பிரான்,

அப்பனை அப்பினுள் அமிர்தந் தன்னையே
ஒப்பனை யொப்பனை யுரைக்க வொண்ணுமோ

என்று பாடியுள அடிகளின் பெருமையை எண்ணுமாறு எண்ணவல்லவர் உள்ளம் பூரிக்கப் புளகம் பூத்தவர்களாவார். நீரிற்கே இயற்கையாகிய ஓர் சுவையைப் பருகுங்கால் உணர்கின்றோமாயினும், அச்சுவை எவ்வகைத்தென்பதை எடுத்தியம்பி உணர்த்தவல்லார் ஒருவருமில்லை என்பதை நினைத்தவுடன், நீரினுள் சுவையையே ஒப்பவன் ஒருவன்றன் ஒப்பனைகளை உரைக்க இயலுமோ என்ற கேள்வியின் உட்கருத்து வெளிப்பட்டுவிடுகின்றது. எனினும், ஐம்பொறிகளின் அநுபவத்தை உவமைப்படுத்திக் காட்டுமிது அறிவினது ஆராய்ச்சிக்கு ஆதாரம் ஆகுமளவே உதவும். உணர்வின் வழியாய் ஒன்றினை எய்தி உண்மையெனப் பற்றிக்கொள்வதற்குப் பயிற்றுவிக்கும் சில சாதனங்கள் வேறுவேண்டுமே. அத்தகைய பயிற்சியை அளிக்கும் நலமுடையது கலை—இதுபற்றி, பின்னர்.

உணர்வினது ஊக்கத்தால் கடவுளின்பால் கருத்து முற்றச் செல்கின்றவொரு சமயநிலை கைகூடுமாயின், பின்பிரபஞ்சத்தைத் தன்னலத்தின்பொருட்டுத் தொடர்புபடுத்துமொரு பொல்லாத்திறமையின்பால் வைக்குமிம் மாபெரு மோகத்தின் அவலந்தீர்ந்து மெய்யறிவின் உய்யுநெறி உற்றவர்களாவோம் என்பதைப் பெரிது விளக்குவதற்கு அவசியமில்லையே. வாழ்க்கையின் நோக்கங்களெல்லாம் சென்று குவியும் இடம் கடவுளாயபின் ஆசைஅவாக்கள் புகுந்திருந்து உழக்குவதற்குரிய வழியடைத்துப் போய்விடுகின்றது. கண்டனவெல்லாம், "என் வாய்க் காகுமா, வயிற்றிற் காகுமா, பேரிற்காகுமா" என்று மக்கள் உயர்த்தித் திரிகின்ற கைகள்தாம் முடங்கவேண்டுமாயின், "கண்டனவெல்லாம், அப் பரம்பொருளின் மோன உருவெளியதாகக் கருதி அஞ்சலிசெய்யுமொரு" அரியநிலையை எய்தவேண்டும். உணர்வினில் உதித்த அக் கடவுட்காட்சியின் திகழொளி எழுந்து உலகப்பொருள்களை விளக்கிக் காட்ட, அவை அஞ்சலி செய்து ஆராதிப்பதற்குரியனவேயன்றி அவாவி அபகரிப்பதற்குச் சற்றேனும் ஏற்றன அல்ல வெனும் மெய்ம்மை கைவரப் பெறும்; வந்ததெனின் திறமையின் தலை சாய்ந்தது.

சமயப்பற்றுடைமையே இக்கால மக்களுடைய சிறுமைகளுக்குந் துயரங்களுக்கும் காரணமாயிருக்கின்றதெனக் கழறுந் திறத்தினோர் கிடக்க—"இறைவா, இவர்தமைப் பொறுத்தருள்க, யாது செய்கின்றனர் என்பதை அறியார், இவர்" எனப் பரிந்தவர்களாய்ச் சமயநெறிவாழ்க்கையின் மேன்மையை நன்குணர்ந்து, ஜனங்களிடை அது பரவவேண்டுமெனும் ஆர்வமுடன் முயல்பவர் எந்நாட்டிலும் இலராகார். இதன் நிமித்தம் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன, கழகங்கள் நிறுவப்பெறுகின்றன; நூல்கள் பத்திரிகைகள் முதலியன இயற்றப் பெறுகின்றன. ஆயினும், சமயத்தின்பால் மெய்ப்பற்று எத்துணை நிலைக்கப்பெறுகின்றதென்பதை அறியாதார் மிகச்சிலர். தர்மோபதேசங்களும் மதபோதனைகளும் கடவுள் நம்பிக்கையையே ஆதாரமாகக்கொண்டு நிகழவேண்டுமாதலின், அந்நம்பிக்கை கைவரும்வண்ணம் மனத்தை முதலிற் பண்படுத்த வேண்டிய அவசியத்தை அறியாதவரையில், இவையனைத்தும் கற்பாறையில் விதைக்கின்ற மதியை ஒத்து முடிகின்றன.

மானுடமனத்தைப் பண்படுத்தும் பயிற்சிக்குரியது கலையுணர்வொன்றே என்பதைப் பலகால் கூறியிருக்கின்றோம். உருவமும் குணமும் மற்றுள இலக்கணங்களும் இயம்புதற்கியலாத ஒன்று இருத்தலுங்கூடும் என்னும் உண்மை நிச்சயமாகவேண்டியது மிகவும் அவசியமன்றோ? அவ்வாறு ஒன்றுஇருக்குமாயின் அதனை ஆர்வமுடன் ஆதரித்துக் கொண்டாடவல்லது உள்ளுணர்வு. இவ் வுள்ளுணர்வு உழுதுஉழுதன்றோ மனத்தைப் [illegible]ண்டென்ற நம்பிக்கைக்

கு நிலைக்களம் வேண்டும். கடவுளின் கதி யாதாயினும், அழகு என்னுமொரு தத்துவம் இல்லை என்பாரெங்குமில்லை. எனினும் 'அழகு' என்னும் அத்தத்துவத்தின் உருவம் குணம் இலக்கணம் முதலியவைகளை வரையறுத்து இயம்புதற்கியலாதென்பதும் வெளிப்படை. அழகு தெரிந்துகொள்ளவேண்டிய தொன்றேயன்றி உற்றுரைக்கக் கூடியதொன்றன்று. மனோவாக்கினிற் கெட்டாமல் உணர்விற்கு மாத்திரம் உண்மையாயிருக்கின்ற அழகின் தத்துவம் வாழ்க்கையுள் வளர வளர, இப்படியே, மனோவாக்கினிற் கெட்டாமல் நிற்கும் கடவுளும் உணர்வின் ஊக்கத்திற்குண்மையாகிவிடும். இதற்கு அழகெனுந் தத்துவம் என்ற சொல்மட்டும் நிலவுவது போதாது. அந்தத்துவம் அநுபவமும்ஆதல் வேண்டும். அழகினைத் தம்முள் தழுவி மக்களுக்கு அனுபவப்படுத்தும் பக்குவத்தில் அமைந்தவைகளே கலைகள். ஆதலின் கலைகளிற் பயின்றுவரும் உணர்வானது, தத்துவக் கடலிலிருந்தெழுந்து வித்தகக் குன்றேறித் திறமையின் இருளைத் தீர்க்குமொரு கடவுளின் உதயத்தைக் கைதொழுது வரவேற்க வல்லதாகின்றது.

தமிழ்ப் பாடம் 47.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[905-வது பக்கத் தொடர்ச்சி]

ஆருயிரு நானு மழியாம லேயாவிப்
பேரரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரில்
இதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வெற்றி
விதர்ப்பன்றன் பெற்ற விளக்கு. 126.

பொழிப்புரை:—வெற்றிபொருந்திய விதர்ப்பராஜன் தன் குலத்தை விளங்கவைப்பதற்குப் பெற்றவொரு விளக்குப் போன்றவளாகிய தமயந்தி, "ஐயா, எனது ஆர்உயிரும் நானும் அழியாமல் இப் பெரிய பாம்பின் வாயிலிருந்து என்னைக் காப்பாற்றினை. யோசிக்குமளவில் இதற்குத் தக்கபடி யான் செய்யக்கூடிய கைம்மாறு யாது இருக்கின்றது," என்று வேடனைப் பார்த்துக் கூறினாள்.

இந்து நுதலி யெழினோக்கி யேதோதன்
சிந்தை கருதிச் சிலைவேடன்—பைந்தொடிநீ
போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றா னெடுத்து. 127.

பதப்பிரிவு:—இந்து நுதலி எழில் நோக்கி ஏதோ தன் சிந்தை கருதி சிலை வேடன் பை தொடி நீ போது வாய் என் உடனே என்றான் புலை நரகுக்கு ஏதுவாய் நின்றான் எடுத்து.

அன்வயம்:—புலை நரகுக்கு ஏதுவாய் நின்றான் சிலை வேடன், இந்து நுதலி எழில்நோக்கி ஏதோ தன் சிந்தை கருதி, எடுத்து, 'பைந்தொடி நீ என்னுடனே போதுவாய்' என்றான்.

பதவுரை.

புலை - அற்பமாகிய
நரகுக்கு - நரகத்திற்கு
ஏதுவாய் - காரணமாகிய பாவத்தினிடத்தில்
நின்றான் - நின்றவனாகிய
சிலை - வில்லை உடைய
வேடன் - வேடன்,
இந்து - சந்திரன் போன்ற [தமயந்தியின்
நுதலி - நெற்றியை உடையவளாகிய
எழில் - அழகை
நோக்கி - பார்த்து,
ஏதோ - எதனையோ
தன் - தன்னுடைய
சிந்தை - மனதில்
கருதி - எண்ணங்கொண்டு,
எடுத்து - அவளைப் பார்த்து,
"பை - பசுமையான பொன்னாற் செய்த
தொடி - வளையல்களை அணிந்தவளே,
நீ - நீ
என்னுடனே - என்னோடு
போதுவாய் - வரக்கடவாய்"
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—'புலைநரகுக்கு ஏதுவாய் நின்றான்என்னும் இவ்வாக்கியத்தில், வாய் என்னும் இது 'இடம்' என்னும்பொருளில் வந்திருக்கின்றது. வீட்டின்வாய், காட்டின்வாய் என்பனபோலாம். நரகத்திற்குக் காரணத்தினிடத்தில் நின்றான், என்பதை, நரகத்திற்குக் காரணமான பாவத்தைச் செய்ய நிற்பவன், என்னப் பொருள்படுத்திக்கொள்ளவேண்டும்.

குறிப்பு:—முதல் வேற்றுமையில் இருக்கின்ற ஒரு சொல் செய்பவனைக் காட்டும். அச்சொல் இரண்டாம் வேற்றுமையை அடையும்போது செய்யப்படும் பொருளையும் காரியத்தையும் காட்டுவதற்கு உரியதாய் மாறிவிடும். மூன்றும் வேற்றுமைக்குச் சிறப்பான பொருள் கருவி. ஒருபொருள் அல்லது காரியம் எதனைக்கொண்டு செய்யப்பட்டது என்பதைக் காட்ட வேண்டியபோது அச்சொல் மூன்றும் வேற்றுமையாக மாறுகின்றது. கர்த்தாப் பொருளும் மூன்றும் வேற்றுமைக்கு உண்டாயினும் அவ் வேற்றுமையின் உதவியில்லாமலே கர்த்தாவைக் காட்டக்கூடுமாகையால் கருவி அல்லது காரணம் என்னும் பொருளே மூன்றும் வேற்றுமைக்கு முதலும் முக்கியமுமான பொருள். 'தச்சன் இப்பெட்டியைச் செய்தான்,' என்னுங்கால் செய்வதாகிய காரியத்திற்குக் கர்த்தா, தச்சன்; அத் தச்சன் என்னுஞ்சொல் முதல்வேற்றுமையில் இருக்கின்றது. இப்பெட்டி தச்சனால் செய்யப்பட்டது, என்னும்போது அதே கர்த்தாவை மூன்றும் வேற்றுமை காட்டுவதாகின்றது. அவ்விதமே ஓடு ஒடு என்னும் மூன்றும் வேற்றுமை உருபுகள் காட்டுகின்ற உடன்நிகழ்ச்சிப் பொருளையும் நாம் அவ்வுருபுகளின் உதவி இல்லாமலே பெறக்கூடும். இராமனோடு கிருஷ்ணனும் வந்தான், என்றாலும் இராமனும் கிருஷ்ணனும் ஒன்றாக வந்தனர், என்றாலும் ஒரே கருத்துத்தான். ஆதலால் மூன்றும் வேற்றுமை அடையாமலுங் கூடச் சொற்கள் கர்த்தா உடனிகழ்ச்சி என்னும் இவ்விரு பொருள்களும் பெறும்படி நடக்கஇயலும். ஆகை

யால்தான் மூன்றும் வேற்றுமைக்கே சிறப்பாய பொருள் கருவிப்பொருள் என்று கூறினேம்.

இனி நான்காவது வேற்றுமையைப் பார்ப்போம். இதன் உருபு கு என்பது ஒன்றே. இந்தக் கு உருபு வந்து ஒரு சொல்லை ஏழுவித பொருள்களில் மாற்றும். அவை கொடை பகை நேர்ச்சி தகுதி அதுவாதல் பொருட்டு முறை என்பன. இவைகளல்லாமல் இன்னும் சில பொருள்களில் நான்காம் வேற்றுமை வரக் கூடுமானாலும் பெரும்பான்மை இவ் வேழுபொருள்களிலேயே அது வருவதால் இலக்கண நூல்களில் இவைகளையே நான்காம் வேற்றுமையின் பொருள்களென்று கொண்டிருக்கின்றனர்:—

ஏழைகளுக்குப் பிச்சை யிட்டான்
ஆசிரியன் மாணவர்க்கு அறிவு அளித்தான் } கொடை

தலைவலிக்கு இது நல்ல மருந்து
பாம்பிற்குக் கீரி வளர்த்தான் } பகை

கண்ணுக்கு மை.
பூவிற்கு மணம். } நேர்ச்சி

மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்
குலத்திற்குப் பெருமை கொடை } தகுதி

குடத்திற்கு மண் கொணர்ந்தான்
தாலிக்குப் பொன் கொடுத்தான் } அதுவாதல்

ஒன்றே மற்றொன்றாகத் திரிவதைக் காட்டுவதால் இப்பொருளை 'அது ஆதல்' என்றழைப்பர்.

கூலிக்கு வேலை செய்தான்
சுவைக்குச் சர்க்கரை போட்டான் } பொருட்டு

இராமனுக்கு இவன் மகன்
கிருஷ்ணனுக்கு மனைவி அவள் } முறை அல்லது உறவு

இங்குக் குறித்த ஏழு பொருள்களில் அடங்காத வேறு சில பொருள்களிலும் நான்காம் வேற்றுமை வரக்கூடும்.

இந்தச் செய்யுளில் 'நரகுக்கு ஏதுவாய் நின்றான்' என்னும் வாக்கியத்திலுள்ள நரகுக்கு என்னுஞ் சொல் நான்காம் வேற்றுமையில் இருக்கின்றது. இப் பாவம் செய்வதால் அவ்வேடன் நரகத்திற்குப் போகும்பொருட்டு நிற்கின்றான் என்பது கருத்தாதலால், நரகுக்கு என்பது நான்காம் வேற்றுமை, 'பொருட்டு' என்னும் பொருளில் வந்திருக்கின்றது.

மற்ற வேற்றுமைகளைப் போலவே நான்காம் வேற்றுமை உருபாகிய கு என்பது விரிந்தும் இருக்கலாம், மறைந்தும் இருக்கலாம். 'பாண்டவர் மனைவி பாஞ்சாலி' என்றக்கால், 'பாண்டவர்' என்பது முறை அல்லது உறவு என்னும் பொருளுடைய நான்காம் வேற்றுமைச்சொல், ஆனால், கு என்னும் உருபு இல்லை. ஆகையால் நான்காம் வேற்றுமைத் தொகை. விரிந்தால், 'பாண்டவர்க்கு மனைவி பாஞ்சாலி' என விரியும்.

உ இன் அத்து, முதலிய இடைச் சொற்களுக்குச் சாரியைகள் எனப் பெயரென்றும், இவைகள் வேற்றுமை உருபுகளைப் பெயர்ச்சொற்களோடு சேர்த்து வைப்பதற்கு உதவியாய் வருமென்றும் முன்னே (687 வது பக்கம்) சிறிது கூறி இருக்கின்றோம். மற்ற வேற்றுமைகளைப் போலவே இந்தக் கு உருபும் சாரியை பெற்றும் சேரலாம், பெறாமலும் சேரலாம். அல்லது இரண்டு மூன்று சாரியைகளை ஒரே சமயத்தில் பெற்று வருதலும் கூடும். கிளிக்கு நாய்க்கு தலைக்கு, என்னும் உதாரணங்களில் கிளி+கு, நாய்+கு, தலை+கு, என்று கு உருபு சாரியை ஒன்றும் பெறாமல் நேராகச் சொல்லோடு சேர்ந்திருக்கின்றது.

பாலுக்கு, கண்ணுக்கு, அவனுக்கு என்னும் உதாரணங்களில், பால்+உ+கு, கண்+உ+கு, அவன்+உ+கு, என்று உ என்னும் சாரியை வந்திருக்கின்றது.

பெண்ணிற்கு, காலிற்கு பொன்னிற்கு, என்னும் உதாரணங்களில், பெண்+இன்+கு, கால்+இன்+கு, பொன்+இன்+கு, என்று இன் என்னும் சாரியை வந்திருக்கின்றது.

மரத்துக்கு, முகத்துக்கு, நகரத்துக்கு, என்னும் உதாரணங்களில், மரம்+அத்து+கு, முகம்+அத்து+கு, நகரம்+அத்து+கு, என்று அத்துச் சாரியை வந்திருக்கின்றது.

பெண்ணினுக்கு, காலினுக்கு, பொன்னினுக்கு, என்னும் உதாரணங்களில், பெண்+இன்+உ+கு, கால்+இன்+உ+கு; பொன்+இன்+உ+கு, என்று இன் உ என்னும் இரண்டு சாரியைகள் வந்திருக்கின்றன.

மரத்திற்கு, முகத்திற்கு, நகரத்திற்கு, என்னும் உதாரணங்களில், மரம்+அத்து+இன்+கு, முகம்+அத்து+இன்+கு, நகரம்+அத்து+இன்+கு, என்று, அத்து இன் என்னும் இரண்டு சாரியைகள் வந்திருக்கின்றன.

மரத்தினுக்கு, முகத்தினுக்கு, நகரத்தினுக்கு, என்னும் உதாரணங்களில், மரம்+அத்து+இன்+உ+கு, முகம்+அத்து+இன்+உ+கு, நகரம்+அத்து+இன்+உ+கு, என்று அத்து, இன், உ, என்னும் மூன்று சாரியைகள் வந்திருக்கின்றன.

இனி, கு என்னும் எழுத்தில் முடிவதெல்லாம்நான்காம் வேற்றுமைச் சொற்கள் என்று எண்ணப்படாது. பாக்கு, நாக்கு, படகு, என்பனபோன்ற சொற்கள் கு என்னும் எழுத்தைக் கடைசியில் பெற்றிருந்தாலும் நான்காம் வேற்றுமைச் சொற்களல்ல. சொல்லின் உருவமே அது. இவை நான்காம்வேற்றுமை அடையவேண்டுமானால் பாக்குக்கு, நாக்குக்கு, படகுக்கு,என்று ஆக வேண்டும்.

——

வேட னழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போ லலமரா—ஓடினாள்
தூறெலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெலா மாக வழுது.

பதப்பிரிவு:—வேடன் அழைப்ப விழி பதைத்து வெய்து உயிரா ஆடல் மயில்போல் அலமரா ஓடினாள் தூறு எலாம் ஆக சுரி குழல் வேல் கண்ணின் நீர் ஆறு எலாம் ஆக அழுது.

அன்வயம்:—வேடன் அழைப்ப விழிபதைத்து, வெய்து உயிரா, ஆடல் மயில்போல் அலமரா, அழுது, வேல் கண்ணின் நீர் ஆறு எலாம் ஆக சுரிகுழல் தூறு எலாம் ஆக ஓடினாள்.

பதவுரை

வேடன் - வேடன்
அழைப்ப - அவ்வாறு அழைக்க, (தமயந்தி)
விழி - கண்கள்
பதைத்து - துடித்து,
வெய்து - வெப்பமாக
உயிரா - பெருமூச்சு விட்டு
ஆடல் - நடனம் செய்கின்ற
மயில்போல் - மயிலைப்போல்
அலமரா - சுழன்று,
அழுது - அழுதுகொண்டே

ஆறுஎலாம் - வழியெலாம்
கண்ணின் - கண்களிலிருந்து
நீர் - (வழிந்த) நீர்
ஆக - ஆகவும்,
சுரி - சுருண்ட
குழல் - கூந்தலானது
தூறு எலாம் - புதர்களில் எல்லாம்
ஆக - சிக்கிக்கொள்ளவும்
ஓடினாள் - ஓடினாள்.

விரிவுரை:—பாம்பின் வாயிலிருந்து உயிர்தப்பிய தனக்கு இவ்வாறு மானக்குறை வருவதோ எனத் தமயந்தி அலமந்து வேடனைவிட்டுத் தப்பி ஓட முயன்றாள். அப்பொழுது அவள் கூந்தல் புதர்களில் சிக்கிப் பிய்ப்புண்டு போயிற்று.

குறிப்பு:—'கண்ணின் நீர்' என்று இங்கு 'வந்திருக்கு மிடத்தில் கண்ணின் என்னும் சொல் ஐந்தாம் வேற்றுமையில் இருக்கின்றது. இவ் வேற்றுமையின் உருபுகள் இல் இன் என்னும் இரண்டு. இந்த இன் வேறு, சாரியையாக வருகின்ற இன் வேறு. இதற்கும் அதற்கும் உருவம் ஒன்றாயிருந்தாலும் இதுவேறு அதுவேறு.

ஐந்தாம் வேற்றுமை, ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் என்ன சம்பந்தம் என்பதைக் காட்டவரும். அந்தச் சம்பந்தம் ஒன்றைவிட்டு ஒன்று நீங்குவதால் ஏற்படலாம்; அல்லது, ஒன்றைப்போல் ஒன்று இருப்பதால் ஏற்படலாம்; அல்லது ஒன்றினிற்கு ஒன்று எல்லையா யிருப்பதால் ஏற்படலாம், அல்லது ஒன்றினிற்கு ஒன்று காரணமா யிருப்பதால் ஏற்படலாம். ஆகையால் ஐந்தாம் வேற்றுமைக்கு, நீங்கல் ஒப்பு எல்லை ஏது, என நான்கு பொருள்கள் இருக்கின்றன. அதாவது இல் என்னும் உருபாவது இன் என்னும் உருபாவது ஒரு சொல்லோடு சேர்ந்து அந்தச் சொல்லை மேற்சொன்ன நான்கு பொருள்களில் ஒன்றைக் குறிக்கும்படி செய்யும்:—

புண்ணில் வழிந்த இரத்தம்
கையின் இழந்த பொருள் } நீங்கல்.

சாதாரண வழக்கத்தில் இந்த நீங்கல் பொருளைக் காட்ட, இருந்து நின்று, என்னும் சொற்களைச் சேர்த்துச் சொல்லுவார். புண்ணிலிருந்து வழிந்த இரத்தம், அல்லது கைநின்று இழந்த பொருள், என்னும் போதும் இல் இன், என்னும் உருபுகள் இல்லாமற் போனாலும் அச்சொற்கள் ஐந்தாம் வேற்றுமையே அடைந்திருக்கின்றன. என்பதை நின்று இருந்து என்னும் சொற்கள் காட்டுகின்றன.

மதியின் குளிர்ந்த முகத்தாள்
அரியின் எதிர்த்துப் பொருதான் } ஒப்பு.

மதியைப்போல் குளிர்ந்த முகத்தை யுடையவள்: சிங்கத்தைப்போல் எதிர்த்துச் சண்டைசெய்தான், என்னும் பொருள் தருவதால் இவை ஒப்புப்பொருளன. எனினும், ஒன்றிற்கு ஒன்று நேராக ஒப்பு என்னாது ஒன்றைவிட ஒன்று அதிகம் அல்லது குறைவு என்ற குறிப்பு இருக்குமாயின், அப்பொழுது ஒப்புப் பொருள் என்னப்படாது. மன்னனின் பெரியவர் புலவர், நாயின் இழிந்தவர் உலோபிகள், என வரும்போது மன்னனைவிடப்புலவர் பெரியவர்என்றும், நாயைக்காட்டிலும் உலோபிகள் தாழ்ந்தவர்கள் என்றும், பொருள் தோன்றுவதால் இவை ஒப்புப்பொருளில் வந்தனவல்ல. பெருமையிலும் சிறுமையிலும் ஒருவரைவிட்டு ஒருவர் நீங்குகின்றனர் என்பதையே காட்டுவதால், இப்படி வருகின்றவைகளை நீங்கல் பொருளோடுதான் சேர்த்துக்கொள்ளவேண்டும். வழக்கத்தில் மன்னனினும் பெரியவர் புலவர் என்று உயர்வுசிறப்பும்மையும், நாயினும் இழிந்தவர் உலோபிகள் என்று இழிவு சிறப்பும்மையும் சேர்த்துப் பேசுவார்.

சென்னையின் வடக்கு நெல்லூர்
பாவத்தின் முடிவு பாழ்நரகம் } எல்லை.

இப்பொருளிற்கு, சென்னைக்கு வடக்கு நெல்லூர், பாவத்திற்கு முடிவு பாழ்நரகம், என, நான்காம் வேற்றுமை உருபும் வழங்குவதுண்டு.

ஈகையின் உயர்ந்த மாந்தர்
கல்வியில் பெரியவன் கம்பன் } ஏது.

உயர்விற்கும் பெருமைக்கும் ஏது அல்லது காரணமாயிருப்பன ஈகை கல்வி என்னும் இவைகள் என்று காட்டுவதால் இங்கு, இன் இல் என்னும் உருபுகள் ஐந்தாம் வேற்றுமையாக அவைசேர்ந்துள சொற்களை மாற்றின. ஆனால் ஏதுப்பொருள் மூன்றும் வேற்றுமைக்கே சிறப்பாகும். வழக்கத்தில், ஈகையினால் உயர்ந்தமாந்தர், கல்வியினால் பெரியவன் கம்பன், என்று மூன்றும் வேற்றுமை உருபு கொடுத்தே பேசுவர்.

இச் செய்யுளில் வந்துள கண்ணின், என்பது ஐந்தாம் வேற்றுமை நீங்கல் பொருளது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[906-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து 2-ம் தசகம்.
6-ம் பாசுரம்.

மாதர்மா மண்மடந் தைபொருட் டேனமா
யாகியாங் காலத் தகலிடங் கீண்டவர்
பாதங்கள் மேலணி பைம்பொன் றுழாயென்றே
வோதுமா வெய்தின ளென்றன் மடைந்தையே

உரை:-மாதர் - அழகான பெண்வடிவம் கொண்ட, மா - மஹத்தான, மண்மடந்தை பொருட்டு - பூமியாகிய பிராட்டிக்காக (மஹா விஷ்ணுவுக்கு இலக்குமி, பூமி, நீளை என்று மூன்று திவ்விய மகிஷிகள் இருக்கின்றனர்.) ஜலார்ணவத்தில் ஆதிகாலத்தில் அமிழ்ந்து போன இந்தப்பூமியைப் பகவான் வராக அவதாரமெடுத்துத் தன் கொம்பாலே உயரக்கொணர்ந்து நிறுத்தினதை இங்குக் கூறுகிறார்:- நிலம் கீண்டவர் - பூமியைப் பாதுகாத்து இரக்ஷித்தவர், பாதங்கள்மேல் அணிந்த திருத்துழாயென்றே, ஓதும் - ஓதும்படியான, மால்-மோஹத்தை, என்மடந்தை - என்னுடைய பெண், எய்தினள் - அடைந்தாள்.

விசேஷக் குறிப்பு:-இப்பாசுரத்திற்கும் 4-ம் பாசுரத்திற்கும் வாசியுண்டு. 4ம் பாசுரத்தில் "திருத்துழாய்

திருத்துழாய்,'' என்று, மந்திரம்போல் ஜபித்த பிராட்டி இப்பாசுரத்தில் அதையே விடாமல் தியானம் செய்தலால் பித்தேறிக் கிடக்கிறாள் என்று அவள் திருத்தாயார் செப்புகிறாள். வாய்ப்பேச்சு நின்றுவிட்டதென்பது தொனி.

7-ம் பாசுரம்.

மடந்தையை வண்கம லத்திரு மாதினைத்
தடங்கொடார் மார்பினில் வைத்தவர் தாளிணைமேல்
வடங்கொள்பூந் தண்ணந் துழாய்மலர்க் கேஇவள்
மடங்குமால் வாணுதலீ ரென்மடக் கொம்பே.

ஸர்வலோக ஈசுவரியாம் ஸௌந்தரிய யௌவனாதி ஸகல குணங்கள் நிறையப்பெற்ற பெரிய பிராட்டியை அதிக விசாலமான தம் திருமார்பில் திருத்துழாய் மாலைகள் நிறையப்பெற்ற விடத்தில் வைத்தவர் தாளின்மேல் தண்ணந் துழாய்மலரை யாசைப்பட்டுப் பெருமையாலே என் பெண் முடிந்தாளென்று அலற்றுகிறாள்— ஆறுயிரப்படி.

8-ம் பாசுரம்.

கொம்புபோற் சீதை பொருட்டி லங்கைநக
ரம்பெரி யுய்த்தவர் தாளிணை மேலணி
வம்பவிழ் தண்ணந் துழாய்மலர்க் கேயிவள்
நம்புமா னுனிதற் கென்செய்கேன் நங்கைமீர்

பதக்குறிப்புக்கள்:— அம்பு எரி - பாணங்களாகின்ற நெருப்பை, உய்த்தவர்-புகச்செய்தவர். வம்பவிழ்-புதிதாய் மலருகின்ற. நங்கைமீர் - குணங்களால் பரிபூர்ணமான பெண்களே. இவள் நம்பும் - கிடைக்குமென்று இவள் திடமாய் நம்பியிருக்கின்றாள்.

பொழிப்புரை-சீதாபிராட்டியார்பொருட்டு இலங்கா நகரத்தை அம்பெறிந்து சுட்டழித்த ஸ்ரீ ராமபிரான் திருவடிகளில் அணிந்த திருத்துழாய்க்கு ஆசைப் படுவாருளரோ? இவள் இத்திருத்துழாயை ஆசைப்படாநின்றாள். நங்கைமீர்காள் நானிதற்கு என் செய்வேன் சொல்லுங்கோள்-என்கிறார்.

விசேஷக் குறிப்பு:—"நான் என் செய்கேன்'' ஸ்ரீராமபிரான் ஏகதாரா விரதம் பூண்டவர். இப்பிராட்டிக்கு, சீதாபிராட்டி பக்கல் அணுகி ஸ்ரீராமபிரான் திருத்துழாயை யாசிப்பது ஒவ்வாதென்று ஞானமில்லாமல் ஆசைப்படுகிறாள்-"இதற்கு என்ன செய்வது' என்று இப்பிராட்டியின் தாயார் கேட்கிறாள்.

9-ம் பாசுரம்.

நங்கைமீர் நீருமோர் பெண்பெற்று நல்கினீர்
எங்ஙனே சொல்லுகேன் யான்பெற்ற வேழையைச்
சங்கென்னும் சக்கர மென்னுந் துழாயென்னு
மிங்ஙனே சொல்லு மிராப்பக லென்செய்கேன்

பதக்குறிப்புக்கள்:-நல்கினீர்-வளர்த்தீர்கள், "இங்ஙனே சொல்லும்-"சங்கு சக்கரம்'' என்னும், 'துழாய்' என்னும், இன்னம் இதுபோலே பகவத் அணிகலங்களை நினைத்து அவைகளை வாய்கொண்டு சொல்லாமாட்டாமையால் வாசகபூர்வமாகச் சொல்லவேண்டுமென்றெத் தனித்துப் பிதற்றும். பகவானுடைய அவதார விசேஷங்களில் அப்போதப்போது அவன் அணியும்துழாய் மாலை முதலான விசேஷங்களை அடைய வேணுமென்று அபேக்ஷைப்பட்டு இந்தப் பிராட்டி வாய்ச்சொல் குன்றிப் பிதற்றுகிறார்.

பொழிப்புரை:—பூர்ணமாய் நற்குணங்கள் நிறைந்த பெண்டீர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் ஓரோர்பெண் பெற்று வளர்த்திருப்பீர்களே, என்பெண் நீதியைப் பற்றியென்ன சொல்லக்கடவேன். சொல்லமுடியவில்லை, ஆனாலும் நானறிந்தமாத்திரம் சொல்லுகிறேன்; இவள் "சங்கு" என்று சொல்லாநிற்கும், சிறிது நேரம் பொறுத்துச் "சக்கரம்'' என்னும்; இன்னம், கொஞ்சகாலம் கடந்தபின் "துழாய்'' என்னும்; இராப்பகல் இதுபோன்ற அநேக வார்த்தைகளை இடைக்கிடை சொல்லாநிற்கும்; என்ன செய்யக்கடவேன்.

விசேஷக்குறிப்பு:-இப்பாசுரத்தில் விளித்துக் கேட்பது சிறுவயதுள்ள பெண்களின் தாய்மார்களே; சென்ற பாசுரத்தில் அப்பெண்களையே விளித்துப் பிராட்டியின் தாய், கிடைக்கத் தகாததை ஆசைப்படுகிறாள் இதற்கு என்னசெய்வதென்று வினவினாள்.

10-ம் பாசுரம்.

என்செய்கே னென்னுடைப் பேதையென் கோமள
மென்சொல்லு மென்வசமு மல்ல ணங்கைமீர்
மின்செய் பூண்மார்பினன் கண்ணன் கழற்றுழாய்
பொன்செய்பூண் மென்முலைக் கென்று மெலியுமே.

பொழிப்புரை:—விரக வியஸநத்தால் விவேகமில்லாமல் தவிக்கும் என் பெண்பிள்ளை என் சொல் கேட்பவளுமல்லள்—என் வசமும் அல்லள். நங்கைமீர்காள்! ஜ்வலிக்கின்ற ஆபரணங்களைத் தன் மார்பில் அணிந்து இருக்கும், ஸ்ரீ கிருஷ்ணபகவான் திருவடியில் இருக்கும் திருத்துழாய் தன்னுடைய ஆபரணங்களணிந்த மார்புக்குப் பூஷணமாக வேணுமென்று என் பெண் எண்ணமிட்டு மெலியாநின்றாள்; இதற்கு என் செய்கேன்.

11-ம் பாசுரம்.

மெலியும்நோய் தீர்க்கும் கண்ணன் கழல்கண்மேன்
மலிபுகழ் வண்குரு கூர்ச்சட கோபன்சொல்
லொலிபுக ழாயிரத் திப்பத்தும் வல்லார்
மலிபுகழ் வானவர்க் காவர்நற் கோவையே.

இப்படி வியஸநமடைந்த தம்முடைய மனஸ்தாபமெல்லாம் தீரும்படி தான் கோரினபடி பகவானோடு கலவை ஏற்பட்டு அவனது திருவடிகளிலே சம்பந்தமாகிற மஹா யசஸை யுடையவரான வண்குருகூர்ச் சடகோபன் சொல்லொலி புகழ் ஆயிரத்து இப்பத்தும் வல்லவர், அபர்வற வமரர்கள் திவ்விய கூட்டத்திற்கு ஒரு பூஷணமாவார்கள். கோவையாவார் - தம் சேர்த்தியில் பிரியராய் அமரர் ஏற்றுக்கொள்ளும் பக்தராவார்கள்.

விசேஷக்குறிப்பு:-எவ்வண்ணம் ஆழ்வாருக்கு "மெலிவு நோய் தீர்ந்ததென்பது'' அடுத்த தசகத்தால் புலப்படுவதால் அந்தத் தசகத்தின் தொடக்கத்தில் பரக்க விவரிப்போம்.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

நவாலி அட்டகிரிச் செவ்வேண் மாலை

காப்பு

செவ்வேண் மாலைச் செந்தமி ழுரைக்கக்
கைவே ழத்தின் கழலிணை காப்பே
பூமிசைப் பொலிந்த நாமகள் சேவடி
நாமிசைப் பொலிய நயந்துவாழ்த் துவனே.

உயிர்

அரனருள் குமர னம்பிகை புதல்வன்
ஆறுமா முகவ னமரர்சே னுபதி
இந்திரற் கருளு மிமையவர் தம்பிரான்
ஈசற் கொருமொழி பேசிய தேசிகன்
உலகமாய் வேறு யுடனுமாய் நிற்போன்
ஊமை யாகி யுயர்பொருள் தெரித்தோன்
என்னிரு கண்மணி பன்னிரு கண்மணி
ஏரகத் துறையுஞ் சீரகச் செட்டி
ஐங்கரத் தொருகோட் டானைக் கிளையோன்
ஒன்னலர்ச் செகுத்த பன்னிரு தோளன்
ஓங்கா ரத்துள் நீங்கா வுள்ளொளி
ஔவிய நெஞ்சி னகன்ற பூரணன்
அஃகா வறிவுக் கறிவா யமர்ந்தோன்.

மெய்

கங்கை மைந்தன் கார்த்திகை சிறுவன்
அங்கிங் கென்னு தெங்கு மாகியோன்
சந்தணி தணிகைச் சுந்தர மூர்த்தி
ஞமலி யூர்தி நயந்த நம்பி
இடம்படு மருணைத் தடங்கிரி வாழ்வோன்
இணங்கிய பேர்க்கெண் குணந்தரு மிறைவன்
தண்டமிழ் மூன்றுந் தந்திடு மாசான்
"நசைநர்க் கார்த்து மிசைபே ராளன்''
பழனி யாண்டி பரம குரவன்
மலரயற் குட்டிப் புலர்சிறை யிட்டோன்
இயக்கு மைந்தொழி லியற்றுமெம் பெருமான்
அரவணை துயிலும் திருமான் மருகன்
இலங்கையிற் கதிரை விலங்க லிருஞ்சுடர்
வள்ளி மணாளன் புள்ளிமயில் வாகனன்
இளமையு முதுமையு மேன்றருள் தோன்றல்
அழகர் மாமலைக் குழக னழகன்
அறம்பொரு ளின்பம் வீட ருளண்ணல்
அனந்தலிற் சயந்தற் கருளிய வையன்

உயிர்மெய்

கந்தன் கடம்பன் கதிர்வடி வேலன்
காலம் மூன்றுங் கடந்த கடவுள்
கிம்புரிக் கூர்ங்கோட் டும்ப லூர்தி
கீரற் கருளிய பேரருட் குரிசில்
குன்று தோறுடும் குமர நாயகன்
கூடற் குடவயிற் குன்றமர் கோமான்
கெச்சைச் செழுந்தார்ச் செச்சை யூர்தி
கேடொன் றில்லா வேடுவர் மருகன்
கைகோ ளிரண்டுங் காட்டிய கலைஞன்
கொஞ்சு மஞ்சொற் குஞ்சரி கேள்வன்
கோடலுங் குரவுஞ் சூடிய குமரன்
கௌவைக் கருங்கடல் காய்ச்சிய வேலன்

சங்கனை யழித்த பொங்கொளிக் குலிசன்
சிரலை வாய்வரு மாரருட் பெருங்கடல்
சுப்பிர மணியன் சோதி வானவன்
சூரனைக் கொன்ற வீரவேல் முருகன்
செல்லூர் பூம்பொழில் நல்லூர் நாயகன்
சேந்தன் குறிஞ்சி வேந்தன் விசாகன்
சைவம் வளர்க்கும் தெய்வக் குருமணி
சொல்லும் பொருளும் சுவாமியு மானோன்
சோதியுட் சோதி யாதி யநாதி

ஞயம்பட வுரைக்கும் நாவலர் நவநிதி
ஞாலத் துயர்வே லைக்கையம் பதியோன்*
ஞிமிறிசை காந்த ளமர்மணி மார்பன்
ஞெகிழித் தீப்போல் நிறைந்து நின்றவன்
ஞேய மாகிய தூய சிவச்சுடர்
ஞொள்கல் தீர்க்கு முள்ளுறு வள்ளல்

தத்துவ முணர்ந்த மெய்த்தவர் தலைவன்
தாயா யருளித் தந்தையாய்க் காப்போன்
திருவா வினன்குடி மருவிய முருகன்
தீமைசெய் தோர்க்குந் தூய்மை தருவோன்
துயரொரு மூன்றுந் துடைக்குமெம் பெருமான்
தூவி மாமயில் மேவிய குரூஉச்சுடர்
தென்னு டாண்ட மன்னவர் மன்னன்
தேமாங் கனிக்குப் பூவலம் வந்தோன்
தையலை யாளப் பொய்யுருக் கொண்டோன்
தொழுவார் மையல் துடைக்கு மருந்துணை
தோற்றமும் முடிவும் மாற்றிடு தொல்லோன்
தௌவை யௌவை தமிழ்மொழி யுகந்தோன்

நச்சினர்க் கினிய பச்சிளங் குழவி
நாதக் கிண்கிணிப் பாதப் போதகம்
"நித்த மணாளன் நிரம்ப வழகியான்"
நீறணி தொண்ட ராறு மாமுகன்
நுணியதி னுணிய னினுவையம் பதியன்
நூலறி புலவன் மாலை மார்பன்
நெருநலு மின்றும் நாளையு மானோன்
நேயத் தெழுந்த தூயநற் கரும்பு
நைபவர் துயரங் கொய்யுஞ் சேவகன்
நொய்யன நுவலா வையர்செந் நாவினன்
நோக்க நோக்க நுழையா நுண்பொருள்

பழமுதிர் சோலை மலைவரு கிழவன்
பால விருத்த குமார னானோன்
பிட்டுமண் சுமந்த வொட்டன் புதல்வன்
பீடுடைச் சரவண வாவியிற் பிறந்தோன்
புலவர் பாடிய குமரகோட் டத்தன்
பூதமைந் திருசுடர் புருடனு மானோன்
பெருமை சிறுமைக் கிருபெரு வரம்பு
பேதமா றறுவகை வாதிகட் கிறைவன்
பைந்தமிழ்ப் பாவலர் சிந்தைக் கினியவன்
பொன்னுமெய்ப் பொருளு மெண்ணினர்க் கருள்வோன்
போகமும் வீடு மீயுந் தியாகன்

மன்னிய கலியுக வரத னெம்மிறை
மானைப் பிடிக்க வனவேங்கை யானோன்

சந்தப் பொதியத் தமிழ்முனிக் காசான்
சார்விலை விட்டோ ராருமா ரமுதம்

* வேலைக்கை-யாழ்ப்பாணத்து மானிப்பாயில் உள்ள ஓர் சுப்பிரமணிய ஸ்தலம்.

மிடிபிணி வல்வினை நொடியினி லழிப்போன்
மீன மாகிய ஞான மூர்த்தி
முத்தியை யருளுஞ் சித்தசன் மைத்துனன்
மூவரு மாகிய மூல காரணன்
மெய்யுரு வாகிய சைவ சிகாமணி
மேவிய மாவைச் சேவலங் கொடியோன்
மையறு கந்த வனத்துறை வரதன்
மொய்ப்புடை வீரர்க் கன்புடை முன்னோன்
மோடி தர்க்கை காடிகாள் குழவி
மௌவல்சே ரட்ட கிரிவளர் மைந்தன்

யந்திர தந்திர மந்திர மானோன்

பானென தற்றவர் பால்வரு பகவன்
யுகம்பல கடந்த நலங்கிள ரிளையோன்

வஞ்சக மில்லார் நெஞ்சக நிறைந்தோன்
வாரிதி நடுவண் மாமுதல் தடிந்தோன்
விலங்கல் கலங்க விலங்கயி லெறிந்தோன்
வீரசிங் காதனம் வீரனுக் களித்தோன்
வெற்றிவேல் பணித்தென் குற்றங் களைவோன்
வேண்டுநர்க் கொளிதரு தூண்டா மணிச்சுடர்
வைதார் தமக்கும் வாழ்வருள் வள்ளல், அவன்
பொன்னடி நாளும் பூசனை புரிவோர் [றன்
விண்ணவர் காணு வீடடை வாரே.

குடி வாழ்க்கை

[Plato's Republic]

[910-வது பக்கத் தொடர்ச்சி]

பிறகு, இத்தகைய முறை நிலைத்திருப்பதற்கு, அரசாங்கத்தை நடத்துகின்றவர் கவனிக்கவேண்டுவதும் ஒன்று இருக்கின்றது. நல்ல பயிர் விளையும் ஒருநிலத்திலும் அவ்வப்போது பயிரை அழிக்கும் சிறு பயிர்களும் விளைவதுஉண்டு. அவ்வப்போது களைபிடுங்குவது நல்ல பயிரின் வளர்ச்சிக்கு எவ்வளவு அவசியமோ அதே போல் சமுகத்தில் ஏற்படும் சிறு களைகளை அவ்வப்போது அரசாங்கம் களைந்து அகற்றவேண்டும். அன்னதற்குக் கல்வி அவசியம். அக் கல்விமுறையில் அரசாங்கத்தார் கண்ணுங்கருத்துமாய் இருத்தல் வேண்டும். கல்வி முறையில் மாறுதல் ஒன்றும் ஏற்படலாகாது. கல்வி முறையில் ஒரு புது மாறுதல் ஏற்படுமேல் அது வெகு விரைவினில் மக்களின் மனநிலையில் ஒரு பெரு மாறுதலை ஏற்படுத்திவிடும். பின்னர் அச் சமுகம் கட்டுக்கு அடங்காது. கல்வி பண்டைய முறையிலேயே எப்பொழுதும் தரப்படவேண்டும். கொடுக்கவேண்டிய கல்வியும் சங்கீதம், உடற்பயிற்சி, சீரிய இலக்கியம், தத்துவக் கலைகளாம். இத்துடன் கணிதநூற் பயிற்சியும், வானநூற்பயிற்சியும் அவசியமாகும். இவைதான் கற்பிக்கப் பெறவேண்டியவைகள். கணிதநூலும் வானநூலும், புத்திக்கு வளத்தையும், மேல்நோக்கையும் தரவல்லன வென்றும், இத்தகைய பயிற்சியுடையவர் மண்ணிற் கிடந்து உழலமாட்டார் என்றும் பிளேட்டோ விளக்குகின்றார். கல்வியின் நோக்கம் தன்னடக்கம் தருவதே. அத் தன்னடக்கமே வித்தக வாழ்வின் வித்து. கல்வி முறையில் தடுமாற்றமில்லாத பாதுகாப்பு அரசாங்கத்தால் செய்யப்பெறவேண்டும்.

இன்னபடியான ஒரு முறையுடைய ஆட்சியில் நாடும் மனிதனும் உயர்ந்து உய்வது சாதம். இந்நாள் உலகம் உற்றுள அவலநிலைக்கெல்லாம் காரணம் உரிமையினிடம் மனிதன் கொண்டுள பற்றுத்தான். அந்த உரிமை தன்னலக் கருத்தை மனிதனிடம் வளர்த்து வைக்க, அத் தன்னலத்தைத் தேடிக்கொள்ளும் வழியில் கையாளப் பெறுவன எல்லாம் நியாயமே என்று எண்ணப்படுகின்றன. எனவே நியாயம் என்பது தனது நலனை அளக்குமொரு கருவியாகின்றதேயன்றி, அதற்குரிய செம்பொருளை அது மேற்கொள்வதில்லை. நியாயம் என்பது எந்நிலையினும் யாருக்கும் தீமை புரியாது என்பதைச் சுயநலம் தெரிந்துகொள்வதில்லை. சுயநலத்தைச் சார்ந்துவரும் போட்டியும் வஞ்சனையும் கொடுமையும் பூசலும், புதுப்புதுச் சட்டங்கள் நிறுவவேண்டிய அவசியத்தை உண்டாக்குகின்றன. உடனே, இதற்கு எதிராக, சுயநலம், அச் சட்டத்தினின்று தப்பும் பொருட்டுச் செய்கின்ற காரியங்களை நியாயம் போல் தோற்றுவிக்கின்றது. புதிய புதிய நிலைமைக்கு உரியபடி புதிய புதிய சட்டங்கள் ஏற்பட்டுப் பிறகு நியாயத்திற்குப் பதிலாகச் சட்டமே அரசாட்சி யாகின்றது. சட்டத்தினின்று தப்புகின்ற சாமர்த்தியமே குடிவாழ்க்கையின் நோக்கமாய் முடியாமல் என் செய்யும். இச்சாமர்த்திய வாழ்வினில் ஆன்மாவுக்கும் கடவுளுக்கும் இடம் அகப்படுவதில்லை. கடவுளும் ஆன்மாவும் இல்லாத இடத்தில் உண்மையான சந்தோஷத்திற்கு இடமில்லையே.

உன் சந்தோஷம் என் சந்தோஷம் என்னும் விவகாரத்தில் துக்கம் பெருகுவதல்லால் வேறென் நிகழ்தல் கூடும்? இது வாழ்வில்லை. வித்தக நிலையே நிலையுடைய சந்தோஷமென்றும், அந்நிலை சீரிய கல்வியாலும் கடமையைச் செய்வதாலும், அடக்கத்தாலும் ஏற்படக் கூடியதென்றும், அறிஞர் பிளேட்டோ முடிவு கூறுகின்றார். நாட்டின் நலத்திற்கு ஜனங்களினிடத்தில் கடமையின்பால் பற்று உண்டாகும்படி மனம் மாறவேண்டும். கடமையில் தோய்ந்துள்ள சந்தோஷத்தைத் துய்ப்பதற்குப் பயிற்சி பெறவேண்டும். அப்பயிற்சியை மனத்திற்கு அளிப்பது தத்துவ அறிவே.

இன்னபடியான நன்னிலையில் மாந்தர் நிலைப்பதற்கு வித்தகர் பாதுகாப்பும், அவர் தூய நினைவும், மாறுதல் இல்லாக் கல்விமுறையும், சொத்துடைமையில்லாமையும் அவசியம். அன்னதற்கு மேற்கூறிய வகுப்புப்பாகுபாடுகள் அவசியமாகின்றன. மாந்தர் தத்தம் வகுப்பினிற்குரிய தொழில் புரிந்து, ஓய்வுநேரங்களில் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். இதுதான் பிளேட்டோவின் முடிவு. இம்முடிவிற்கு இணங்காத எந்த ஏற்பாடும் எவ்வகைமாறுதலும் நன்னிலைக்குரிய தாகாதென்று அவர் வற்புறுத்திக் கூறுகின்றார்.

பண்டை இந்தியாவும் இதையே தான் கூறிற்று. வித்தமுடையவனே அரசனாக விருந்தான். அவன் தொழில் நாடு காத்தல். வேறொரு வகுப்பினர் தத்துவத்

துறைதோய்ந்து வாழ்ந்தனர். அவர் தொழில் ஓதுவித்தல். மற்ற இரு இனத்தவர், வர்த்தகம் கைத்தொழில் முதலிய வேலைகளில் ஈடுபட்டு வாழ்ந்தனர். அவ்வளவே. எல்லோரும் இதனால் தத்தம் கடமையில் தலைநின்று பணக்குவியலையும் சுகப்பொருள்களையும் நாடாமல் அமைதியில் நிலைத்து வாழ்ந்தனர். மேலும், ஒவ்வொரு வகுப்பினனும் தனக்குரிய காரியங்களைக் கடைப்பிடித்து அக் காரியங்களை ஏற்பதற்குச் சந்ததி ஏற்பட்டவுடன், அவன் எல்லாக் கடமையினின்றும் விலகிக் கானகம் எய்திக் கடவுளைப் பற்றினன். நாடும் தர்மத்தில் தழைத்திருந்தது. இன்னபடி, ஏதன்ஸ் நகரிலும் பண்டைய இந்திய நாட்டிலும் வித்தக மெய்ந்நிலை எய்தியவர் யாவரும் காணும் முடிவு இறுதியில் ஒன்றே ஆகின்றது. இத்தகைய நிலை இனி இயல்வதொன்றோ என்ற சந்தேகம் பிறப்பது இயல்பு. பிளேட்டோவின் நண்பர்களும் அயிர்த்தனர். அன்னதற்கு அப்பெரியார் கூறிய பதில் இது.

"நான் சித்தரித் துரைத்த இதுபோன்ற ஒரு நாடு பூலோகத்தில் இருக்க இயலாத ஒரு நாடு ஆகலாம். அதனால் என்? அத்தகைய தெய்வச்சிறப்புடைய ஒரு முறையை இவ்வுலகினிற்கு அழைத்து அமைக்க விரும்புபவர் செவ்வியோர். அத்தகைய ஒரு நாட்டின் குடிகளாய் அமைவதற் குரியபடி தத்தம் வாழ்க்கையைத் திருத்திக்கொள்ளத் தலைப்படுவார் மேலோர். அதுவே வித்தகத்தின் இயல்பு. வித்தக மெய்தியவன் தன்வாழ்வை இவ்வண்ணம் திருத்தி அமைத்துக்கொள்வானேயன்றி, அது முடியுமா முடியாதா என்று கேட்டும் அயிர்த்தும் தடுமாறிக் குலைந்துபோகான்" இப்பொன்மொழிகளின் செம்மையையே நம் கலாநிலயம் கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கூறிவருகின்றது. லண்டனில் உள்ள பிக்பென்கடியாரத்தின் ஓசையைச் சென்னையில் கேட்க இயலுகையில், இது மாத்திரம் ஏனோ இயலாமற் போகவேண்டும். அந் நன்னிலை இந்தியாவில் ஒருநாள் இருந்துளது. வித்தகமுடைய மனத்திலே பிறந்துவளர்ந்த எந்த முடிவும் இயல்வதொன்றே. முடியாத ஒன்றை மனம் நினைப்பதில்லை. பிளேட்டோ கனவாகக்கண்ட குடிவாழ்க்கை இந்தியாவில் நிச்சயமாய் நிலைத்திருந்த வாய்மையை எவரும் மறுக்க வியலாது.

பிளேட்டோ சொன்ன செவ்விநிலையை அடைய முடியாதோ என்று அயிர்ப்பதினினும், நாம் ஒவ்வொருவரும் அதனை அடையும்வண்ணம் முயன்று பார்ப்பது நலம். அது இன்பத்திற்கும் இடமாகும். வாழ்க்கையைப் பற்றியுழக்கும் சிறுமைகளும் அகலும். கடவுளின் திருநடனம் எங்கும் நிகழ்ந்திருக்கும்.

முற்றிற்று.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[909-வது பக்கத் தொடர்ச்சி]

14. சலம்—Quibbles

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னொடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே

நமச்சிவாயத் திருப்பதிகம்-பண் காந்தாரபஞ்சமம்.

இதில் "சலம் இலன் சங்கரன்" என்றவிடத்தில்ஒரு பொருள் கருதி வேறு பொருள் படும்படிச் சொல்லும் தன்மை சிவபெருமானிடத்தி லில்லையென் றாகும்.

சொல்லும் சொல்லுக்குத் தாத்பரியம் வேறுபடப் பொருள் வேறு கற்பித்துத் தூடணஞ் சொல்லுதல் சலமாகும். இது வாக்குச்சலம் எனப்படும். இவன் நவகம்பள முடையவன் (புதிய கம்பளமுடையவன்) என்று கூறும்போது, இரண்டு கம்பளத்திற்குப் பொருள் இல்லாத ஏழை இவன் ஒன்பது கம்பளம் எவ்வாறு பெற்றானென்பது சலவாதம்.

சாமானிய சகிதமாயும் சம்பவிப்பதாயுமுள்ள அர்த்தாபிப்பிராயத்தினால் கூறிய வாக்கியத்திற்கு, சாமாநிய சம்பந்தமின்றியும் சம்பவிக்காததாயுள்ள அர்த்த கற்பனையினாற் பழித்தல் சாமாநிய சலமாகும்.

சீலம்மிகு சித்தத்தவர் சிந்தித்தெழு மெந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரு முலகத்தவர் நலமார்
கோலம்மிகு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
ஏலங்கமழ் பொழில்சூழ்தரு மிடும்பாவன மிதுவே

சம்பந்தர்.

சீலமுடைய சித்தர் வணங்கும் பெருமான், நடலை வாழ்வில் இன்பம் மிகுதியாய் நுகர, அழகில் மிகுந்த மடவார் குன்றில் வசிக்கின்றார் என்னும் புகலிவேந்தர் விநோதச் சொற்களை நோக்குக. இது சாமாநிய சல வுருவகத்தில் பாடிய பாடலாகும்.

மூன்றாவது வகை உபசார சலம் எனப்படும். சத்தி லட்சணையென்னு மிரண்டனுள் ஒன்றன் விருத்தியினாற் கூறிய சப்தத்தில் வேறு விருத்தியினால் எந்த விலக்குச் சம்பவிக்கின்றதோ, அது உபசாரசலமெனப்படும் (உ-ம்) "சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக்கனியே" என்ற விடத்து, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லாத் தத்துவங்களையும் விளக்கும் பேறறிவே என்ற பொருளிருக்க, சிறிய வஸ்து, திண்பண்டமானதொரு சாமநிய கனி உருவகத்தில் காட்டியது, * உபசாரசலத்தின் உருவகமாகும்:—

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்டவாறே.

திருவாய்மூர் - திருத்தாண்டகம் - 8.

"சலம்" என்பது நன்கு தெரிந்து அதைச் செய்யுளில் அமைத்துப் பாடுவது அலங்கார நிமித்தமன்றி வேறன்று. வாதத்தின்கண் அதை உபயோகப்படுத்துவது தகுதியன்று. இக்கருத்தை யெண்ணியோ திருநாவுக்கரசும் "சுவைதனைச் செய்து வாழ்வான் சலத்துளே யழுந்துகின்ற இவையொரு பொருளுமல்ல" என்றார் போலும்.

* சலவ ராயொரு பாம்பொடு தண்மதி
கலவ ராவதின் காரண மென்கொலோ
திலக நீண்முடி யார்செம்பொன் பள்ளியார்
குலவி லாலெயின் மூன்றெய்த கூத்தரே.

திருஞானசம்பந்தர்.

15. சாதி—(False Analogy)=சமை

அசத்தான உத்தரம், அதாவது போலியுத்தரம் தர்க்கத்தில் சாதி என்னப்படும். அது இருபத்துநான்கு வகை. அவையாவன.

(1) சாதர்மிய சமை:- அதாவது பொதுவியல்பு அல்லது சமான தர்மத்தினாலே ஸ்தாபகமாயிருக்கிற ஏதுவைத் தூஷிக்கும் உத்தரம் சாதர்மிய சமை. ஆத்மா கிரியையுடன் கூடியது. கிரியைக்கு ஏதுவான குணத்தை யுடைத்தாயிருத்தலின்; மண் பிண்டம் போல. என்னும் உதாரணத்தில் காண்க.

(2) வைதர்மிய சமை—அதாவது வேற்றியல்பு; அல்லது விரோத தர்மமுடைய ஏதுவால் உத்தரம். இதன் உருவகத்தை சுந்தரர் தேவாரப்பதிகத்துப் பின்வரும் செய்யுளிற் காண்க:—

பிணிவண் ணத்தவல் வினைதீர்த் தருளீர்
பெருங்காட் டகத்திற் பெரும்பேயு நீரும்
துணிவண் ணத்தின் மேலுமோர் தோலுடுத்துச்
சுற்றுநா கத்தராய்ச் சுண்ண நீறுபூசி
மணிவண் ணத்தின் மேலுமொரு வண்ணத்தராய்
மற்று மற்றும் பல்பல வண்ணத்தராய்
அணிவண் ணத்தராய் நிற்றீரெம் பெருமான்
அடிகேளுமக் காட்செய வஞ்சுதுமே —சுந்தரர்.

(3) உத்கருஷ சமை—உத்கருஷமென்பது உயர்ச்சி. பிறன் கூறிய ஏதுவினாலேயே அதற்கு அவ்வியாபகமான தர்மத்தை அப்பட்சத்தில் வருவித்தல். இதன் உருவகத்திற்கு உதாரணம்:—

ஆரட்ட தேனு மிரந்துண் டகமக வன்றிரிந்து
வோரட்ட நிற்பித் திடுகின்ற தால்விரி நீர்ப்பரவை
சூரட்ட வேலவன் றாதையைச் சூழ்வய லாரதிகை
வீரட்டத் தானை விரும்பா வரும்பாவ வேதனையே.
திரு அதிகை வீரட்டானம் திருவிருத்தம் 5.

(4) அபகருஷ சமை—அதாவது தாழ்ச்சி சமை. பிறன் கூறிய திருஷ்டாந்த சாதர்மியத்தினாலே பட்சத்தில் அவன் அங்கீகரித்துள்ள தர்மாந்தரத்தின் அபாவத்தைச் சாதிப்பது. இதன் உருவகத்தை அப்பர் தேவாரத்தில் காணலாம்—

ஆவா சிறுதொண்ட னென்னினைந்
தானென் றரும்பிணிநோய்
காவா தொழியிற் கலக்குமுன்
மேற்பழி காதல்செய்வோர்
தேவா திருவடி நீறென்னைப்
பூசுசெந் தாமரையின்
பூவார் கடந்தையுட் டூங்கானை
மாடத்தெம் புண்ணியனே
திருத்தூங்கானை மாடம் - திருவிருத்தம் 2.

(5) வர்ணிய சமை—அதாவது புகழ்ந்துரை சமை. ஸ்தாபிக்கத் தகுந்த திருஷ்டாந்த தருமத்தைப் பட்சத்தில் சாதிப்பது வர்ணிய சமை யெனப்படும். (உ-ம்)

உரித்தவுடை யார்துவரா வுடம்பை மூடி
யுழிதருமவ் வூமரவ ருணரா வண்ணம்
பரிந்தவன்காண் பனிவரைமீப் பண்டமெல்லாம்
பரித்துடனே நிரந்துவரு பாய்நீர்ப் பெண்ணை
நிரந்துவரு மிருகரையுந் தடவா வோடி
நீன்மலனை வலங்கொண்டு நீள நோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே.
திருமுண்டீச்சரம் - திருத்தாண்டகம் 8.

(6) அவர்ணிய சமை—அதாவது பழித்துரைக்கும் சமையாம். சாத்திய ஏதுக்களைப் பட்சத்தில் ஒப்புமையாகச் சாதிப்பது அவர்ணியசமை யென்பர்.

புற்றில் வாளர் வாட்டி யுமையோடு
பெற்ற மேறுகந் தேறும் பெருமையான்
மற்றை யாரொடு வானவ ருந்தொழ
ஒற்றி யூருறை வானோர் கபாலியே.
திருவொற்றியூர் - திருக்குறுந்தொகை 5.

இங்கு, வானோரால் தொழப்படுந் தன்மைக்கும் பாம்பாட்டி எருதேறுவதற்கும் ஒற்றுமைப்படுத்திச் சமைகாட்டல் கவிதிறத்தின் சிறப்பாகும்.

(7) விகற்ப சமை—உபமான விகற்பத்தைக் காட்டி உவயேம விகற்பத்தைக் கூறுவது விகற்ப சமை:-

தேயன நாட ராகித் தேவர்கள் தேவர் போலும்
பாயன நாட றுக்கும் பத்தர்கள் பணிய வம்மின்
காயன நாடு கண்டங் கதனுளார் காய கண்டர்
மாயன நாடர் போலு மாமறைக் காட னாரே.
திருமறைக்காடு - திருநேரிசை 2.

(8) சாத்திய சமை—திருஷ்டாந்தத்தைப் பக்கத்திற்கு ஒத்ததாகக் கூறுவது:-

எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறைகொண் டாறலைப் பாரிலை
பொங்கா டரவா புக்கொளி யூரவி நாசியே
எங்கோனேயுனை வேண்டிக்கொண் டேன்பிற வாமையே.
சுந்தரர்.

(9) பிராப்தி சமை—பிராப்தி என்றால் அடைவு. பிராப்தியினால் எதிர்த்து நிற்பது பிராப்திசமை யென்று கூறப்படும். இதன் உருவகம்—

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வமுயர் கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே.
சம்பந்தர்.

(10) அப்பிராப்தி சமை—அதாவது அடைவு இன்மையை உடைய சாதியாகும். இதன் உருவகம்—

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் றன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் மறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே.
திருவான்மியூர் - திருக்குறுந்தொகை 2.

(11) பிரசங்க சமை—சாதனத்தில் பரம்பரையை வினவுதல் பிரசங்க சமை (உ-ம்)

கழியுளா ரெனவும் கடலுளா ரெனவும்
காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளா ரெனவு மலையுளா ரெனவும்
மண்ணுளார் விண்ணுளா ரெனவும்
சுழியுளா ரெனவும் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்
பழியுளார் போலும் பந்தனை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே.
சம்பந்தர்.

(12) பிரதி திருஷ்டாந்த சமை—வேறு திருஷ்டாந்தத்தால் சாத்தியா பாவத்தைச் சாதிப்பது பிரதி திருஷ்டாந்த சமை.

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணகம் முழுதும் யாவையும்

வைச்ச வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயினுங் கொல்லார்
நானு மங்ஙனே யுடைய நாதனே.
திருவாசகம்.

(13) அநுற்பத்தி சமை - உற்பத்திய பாவத்தினால் பிரதி அவஸ்தானம், அதாவது எதிர்த்து வருகை, அநுற்பத்தி சமையெனப்படும். கடம் நித்தியமன்று, ஜன்னியமான ஏகத்துவத்தினால், என்னுமிடத்து ஜன்னியமான ஏகத்துவம் அநித்தியத்துவத்தைச் சாதிப்பதில் பிரமாணமாயின், அப்போது கடத்தில் ஏகத்துவ முண்டாவதற்கு முன்னர், ஜன்னியமான ஏகத்துவ மின்மையின் அதற்கு நித்தியத்துவம் சம்பவிக்கின்றது. அது நித்தியமாயின் அப்போது உண்டாகாததே யாம் என்பது.

(14) சம்சய சமை—சாதாரண தர்மத்தைக் காட்டிச் சம்சயத்தை யுண்டுபண்ணுவது சம்சய சமையாகும்.

(15) பிரகரண சமை—வாதி கூறிய ஏதுவினும் சாத்தியத்திற்கு விபரீதமான வேறொரேதுவைக்காட்டல் பிரகரணசமை யெனப்படும். இதற்கு உதாரணம் ஏதுப்போலிகள் ஐந்தனுள் ஒன்றாகிய சற்பிரதிபட்சமேயாம்.

(16) அவேது சமை—முக்காலத்தினும் ஏதுத்தன்மை சம்பவியாமையால் ஏது அன்றென்று கூறுவது அவேது சமை. அதன் உருவகத்திற்கு அப்பர் தேவார உதாரணம்:—

மலையாற்பொற் பாவையொடு மகிழ்ந்த நாளோ,
வானவரை வலியமுத மூட்டி யந்நாள்
நிலைபேறு பெறுவித்து நின்ற நாளோ
நினைப்பரிய தழற்பிழம்பாய் நிமிர்ந்தநாளோ
அலைசாமே யலைகடனஞ் சுண்ட நாளோ
அமரர்கணம் புடைசூழ விருந்த நாளோ
சிலையான்முப் புரமெரித்த முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளோ:
திருவாரூர் திருத்தாண்டகம் 2.

(17) அருத்தாபத்தி சமை—அருத்தா பத்தியை முன்னிட்டுச் சாத்தியாபாவத்தைக்காட்டல் அருத்தாபத்திச்சமை (Assumption). பகலில் உண்ணுமற் பருத்தவன் இரவில் உண்டவன் எனில், யோக முறையில் *சகோரப்பட்சிகள் போல் நிலவின் கிரணங்களின் அமுததாரையால் தம் உடலைப் பருக்கச்செய்யத்தக்க வரும் உளரென்பதுசுருதியாதலின், அத்தகையசமை அருத்தாபத்தி சமையெனப்படும்.

(18) அவிசேஷ சமை—எல்லாம் சமானமாயிருக்கலாமே யென்று காட்டுவது அவிசேஷ சமையாகும்.

வெறிவிரவு கூவிளநற் றொங்கலானை
வீரட்டத்தானை வெள்ளேற்றி னானை
பொறியரவி னானைப்புள் ளூர்தி யானைப்
பொன்னிறத்தி னானைப் புகழ்தக் கானை
அறிதற் கரியசீ ரம்மான் றன்னை
யதிபரைய மங்கை யமர்ந்தான் றன்னை
எறிகெடிலத் தானை யிறைவன் றன்னை
யேழையே னான்பண் டிகழ்ந்த வாறே.
ஏழைத் திருத்தாண்டகம் - 1.

(19) உபபத்தி சமை—உபயபக்ஷ சாதர்மியத்தினால் சாதனம் பொருந்துமாறு கூறுதல் உபபத்தி சமை. இதற்கு உதாரணம் திருச்சாழல் வினாக்கள்:—

அயனை அனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ?
நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ.
திருவாசகம்.

(20) உபலப்திசமை-சாதனபாவம் வாதியினாற்காட்டப்பட்டிருப்பினும் சாத்தியம் காணப்படுவதாகக் கூறல் - (உ-ம்) 'சப்தம் அநித்தியம்; பிரயத்தனத்தை அநுசரித்துண்டாகின்றமையின் - கடம்போல்' மரக்கொம்பில் சப்தம் பிரயத்தனமின்றி உண்டாவதால்— இது உபலப்தி சமையாகும்.

(21) அநுபலப்திசமை—வாதி அநுபலப்தி வசத்தினாலே சில பதார்த்தங்களை அங்கீகரியாதிருக்கும் போது, பிரதிவாதி அநுபலப்தி வாதத்தினாலேயே வாதி அங்கீகரித்துள்ள சில பதார்த்தங்களின் அபாவத்தைச் சாதிப்பது அநுபலப்தி சமை.

(22) நித்தியசமை—தர்மம் நித்தியம், அநித்தியம் என்னும் விகற்பத்தினால் தர்மநித்திய மென்று சாதிப்பது நித்தியசமை.

(23) அநித்தியசமை—அநித்தியமான திருஷ்டாந்தத்தின் சாதர்மியத்தினால் சர்வபதார்த்தமும் அநித்தியமாம் என்று நிரூபித்தல் அநித்தியசமை.

(24) காரிய சமை—வாதியாற் கூறப்பட்ட ஏதுவிற்கு அநித்திய காரியத்தினைச் சம்பவித்தலைக் கூறல் காரியசமை.

தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ்
சேர்ந்துவள சித்தாகியச்
சித்தெலாஞ் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்ரமாய்த்
திரமாகி நானுவிதப்
பொருளாகி யப்பொருளை யறிபொறியு மாகியைம்
புலனுமா யைம்பூதமாய்ப்
புறமுமா யகமுமாய்த் தூரஞ் சமீபமாய்ப்
போக்கொடு வரத்துமாகி
இருளாகி யொளியாகி நன்மை தீமையுமாகி
இன்றாகி நாளையுமாகி
என்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவுமாய்
இவையல்ல வாயநின்னை
அருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவர்
அறிவதற் கெளிதாகுமோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மான பரமே.
தாயுமானவர்.

---

* சருகுசல பட்சணிக ளொருகோடி யல்லால்
சகோர பட்சிகள் போலவே
தவளநில வொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மைய ரனந்த கோடி—தாயுமானவர்

தேகம் இளைப்பதற்குக் காரணம் அதனிடத்தமையும் வினைகளாம். அவற்றை யொடுக்கும் யோகிகளுக்குத்தேகம் "காய சித்தி" பெறும்.

வினையெலாஞ் சங்கேதமாய்க் கூடியே
தேகமானதை மிகவும் வாட்டுதே.—தாயுமானவர்
எங்கு நிறைகின்ற பொருள் 6.

188982

பொதிகை நிகண்டு

[913-வது பக்கத் தொடர்ச்சி]

ரகர வெதுகை

அரசுமன்ன னொருமரமா மரபுதொன்மை முறையாம்
அரசனிறை சிகண்டிகளுஞ் சுருதியொலி மறையாஞ்
சிரசுதலை மேன்பாடாங் கரில்பிழைகாழ்த் தலுமாஞ்
சிரகம்வட்டில் கமண்டலமுந் தலைக்கிரா ணமுமாம்
புரசுபலா சிளமகவாம் பிரசந்தேன் வண்டாம்
புரநகர முடம்பாகுஞ் சிரநெடுகோட் சிரசாம்
இரசம்பா ரதமினிப்பா முரண்வலியே பகையாம்
இரலைகலை யசுபதிபுல் வாய்கொம்பாந் தரமே. 439.

தரமுவமை தலைதரிப்பா மரமறுத்த லரமாஞ்
சரல்சரலே மழைநாளாந் தூரம்வலியுச் சமுமாம்
பரமுடிவு கெதிகவச மானையின்பின் காலாம்
பரணிதுடி கலனுளாம் புரணிதோல் வயலாம்
இரவிமலை வெய்யோனும் வரனயன்கோன் சிவனும்
இரவுநிசி யாசகமுமாம் விரவுகொடை கலப்பாம்
பிரமமறை மகந்தீமந் திரமாலா டிரவி
பிரமனரன் முனிவர்முத்தி மதியிரண்டா றுரித்தே.

உரம்வலிமார் பூக்கமருந் தெருஞான மாரும்
உரியளவு தோலுரித்தாஞ் சரிவளைபா தையுமாங்
கரம்விடங்கை முடியிறைவே சரிகிரண மைந்தாங்
கரகமா லாங்கட்டி கமண்டலநீர்த் துளியாங்
குரலிசையாழ் நரம்புகதிர் கூந்தலிற கைந்தாங்
குரமுளைஞ்சில் பரிக்குளம்பாம் வருணநிறங் குலமாம்
இரதமரை ஞாணிரதஞ் சுவைபுணர்ச்சி தேராம்
இரதிபிடி யிரதியிச்சை பித்தளையாய்ப் பரவே. 441.

பரவைதிருக் கூத்துத்தி பரப்பொருபெண் ணென்காம்
பரிசுமத்தல் வேகங்காத் திடல்வருத்த மாகும்
அரவமொலி பாம்புடனூ புரமிவைமூப் பேராம்
அரலையே கழலைவிழை மரல்கனிநாற் பேராம்
குரவைவா யொலிகடலாங் கிரகமனை கோளாங்
குருநிறைநோய் புகையாசான் பாரம்வியா ளமுமாம்
சுரநெறிகான் சுரமாகு மருகல்குன்றல் சார்வாஞ்
சுரைபசுவின் முலைதுளைகள் ளெனமுப்பேர் கருதே.

கருவிதுளை யியங்கவசம் யாழீட்டந் தொடர்ச்சி
கலனைதுகில் புயல்கூட்டம் படைவினைகச் சையுமாம்
அருவிமலைச் சாராறு தினைத்தாளு மாகும்
அருணன்சூ ரியனருணன் புதன்சிவனுற் பேராம்
முருகிளமை மனமெழுச்சி வேள்விழா மதுவா
முரசொருநாட் பறையாகுந் தரளமுத்துத் திரள்வாங்
குருகுவளை புள்ளிளமை நாரைவெள்ளை மூலங்
கோழிமா தவியுலைமூக் கொன்பதுபே ருரையே. 443.

உரைமொழிதேய் தலுமாகுங் கரைகரைசோர் தலுமா
முருவடிவு நிறம்பயமட் டையுமுருப்போ டலுமாம்
நரைசவரி பரிநாரை வெள்ளைநந்தி யைந்தாம்
நரம்புவட நாடியுமாங் குரம்பையுடல் கூடாம்
விரைமணந்து பஞ்சாந்தாம் வரைதல்கொள்ளல் விடலாம்
விருத்தம்பா வினம்வட்ட மூப்புமலை நான்காம்
அரையிடைபா தியுமாகும் வரைமலைவேய் வரிப்பேர்
அருள்கருணை யுமையாகு மிருள்நரக மிருளே. 444.

இருசுபண்டி யுள்ளிரும்பு செவ்வையிரு பேராம்
எருவைசெம்பு கழுகிரத்தங் கோரைநா ணலுமாம்
அருணமா னெலுமிச்சுத் தகர்சிவப்பு நான்காம்
அரணம்வேல் மதில்காடு கவசங்கா வலுமாம்
குருதிசெந்நீர் குசன்சிவப்பாஞ் சரிகுவிதல் பிடாரங்
குரங்குகோண் கவிவிலங்கா முருந்துவெள்ளை முருந்
பருதியூர் கோளிரவி நேமிவட்ட முருளாம் [தாம்
பரிகமம்பு மதில்மேடை கிடங்கெனக்கோ சரியே. 445

சஞ்சரித்தல் டெஞ்சரமூச் சம்புநா ணலுமாந்
தருணம்போ திளமையுமாஞ் சரணந்தாள் புகலாம்
அரம்பைசூர் கதலியுமா மருந்தலுணல் குறைவாம்
அரங்கமாற் றிடைக்குறைகூத் தாடிடமம் பலமாம்
நரந்தநா ரத்தையுங்கஸ்த் தூரியுமென் றாகும்
நார்பரிவு கயிறிரண்டாம் வேர்மரவேர் வேர்வாம்
விருந்தமே கிளைதுளசி விலங்கின்கூட் டமுமாம்
வெருகலவ னேர்செடியா னெரலோசை விரைவே.

விருத்திதொழி லாதாயம் வளர்ச்சியடி மையுமாம்
வீரமலை சேவகமாம் வீரைதுயர் கடலாம்
கிருத்திமம்பொய் தொழில்பூதந் தோலெனநாற் பேராங்
கிருட்டியோ ரீற்றுவும் பன்றியுமென் றிரண்டாந்
துருத்திதோ லரங்கநீர்த் துருத்திதுட்டை நான்காஞ்
சுருங்கையே நுழைவாயில் காந்துசெய்கற் புடையாம்
அருப்பமூர் மோர்மதுக்கா னெய்துற்க மழுக்காம்
அரத்தமே குருதிசெம்மை குவளைகடம் பரக்கே 447.

அரக்குமெழு கொடுசிவப்புக் கள்ளின்விகற் பமுமாம்
அரற்றலொலி யழுதலுமா முருக்கல்சின முளைப்பாம்
இரத்தமுதி ரஞ்சிவப்பா மருத்தநிதி பகுப்பாம்
எருந்துரலுங் கிளிஞ்சிலுமா மருங்கிடைபக் கமுமாம்
கிரப்புமிடி யிகல்குன்றல் சமைநோயைம் பேராம்
நேர்மிகுதி சமநேர்மை நிகருடன்பா டனுவார்
துருக்கமே யரண்செடிகுங் குமங்கஸ்த்தூ ரியுமாஞ்
சூரன்சூர் தீயிரவி விறலோனு யரியே. 448.

அரிகடல்காற் றிந்திரன்மால் காந்திமலை பரிபொன்
னுடரிசி யுவாதேரை நிறமநிதி யடல்வா
ளிரவுகுரங் கரவுபுகை கிளிகணைவே யரித்த
லிமன்கூர்மை பறைசோலை புகர்விசிசே கரிதல்
கருவிபகை பன்றிசிங்கந் தேர்தகடு நேமி
கண்வரிநெற் கதிர்பசுமை வண்டுமதுப் பாயல்
பரிபுரத்தின் பரலிவைநாற் பானேழென் றாகும்
பரிவெனுஞ்சொல் லன்புதுன்ப மின்பமுமாம் பாரே.

பாரநிறை பார்கவச மரபுபொறை பாரம்
பரிகலனை தோணிநீர்க் கரைகழுகும் பத்தாம்
வாரமலைச் சார்கிழமை கடல்கரைபங் கன்பாம்
வரிகடல்வேய் நெற்பசலை யெழுத்திசைவண் டிறையாம்
ஆரமழை பதக்கமுத்த மாத்திசந்தந் தொடையாம்
அருச்சுனமென் பதுவெண்மை மருதமா மிரண்டாந்
தாரமிசை நாமனைவி வெள்ளிகண்பண் டமுமாந்
தரித்திரிபார் மிடியனுமென் றுரைத்தனர்கா ரிகையே.

காரிகைபெண் ணழகுகலித் துறையொருநூ லாகுங்
கரியவனிந் திரன்சனியன் கண்ணன்சாத் தனுமாஞ்
சாரிகைசங் கொடுபூவை சுழல்காற்று மூன்றாஞ்
சரபம்வரை யாடுள்ளா மருதமாந் திணையாம்
ஆரிகத வழகாகுஞ் சூரணந்தூள் கிழங்காம்
ஆர்தலுண்டல் நிறைவாகு மாரைமதில் பாயாந்
தூரியமே யெருதெழுதுங் கோலியஞ்சீ லையுமாஞ்
சுரிகைவாள் கவசம்வலம் புரியாங்கூர் விழியே. 451.

கூரல்குழற் சிறகாகுங் கூர்மிகல்வை கூர்ப்பாங்
கூர்மமா மையுமோர்பு ராணமுங்கோ பமுமாஞ்
சாரேல மலைப்பக்க மலையொருசார் மழையாந்
தாருகா ரிப்பெயரே சண்முகன்கா ளியுமாம்

ஆரல்குசன் கார்த்திகைதி யாறுறப்போர் மீனும்
அரிதமே பசுமைநிக்காந் திருமாச்சீர் சிறப்பாம்
மூரலன நகைபல்லாஞ் சார்பிடம்பற் றாகும்
முரம்புசா யலுமேடும் பாறையுமுப் பேரே. 452.

பேர்பெருமை நாமமுமாம் பீர்பசலை பீர்க்காம்
பீருவே யச்சமுற்றோன் புருவமுமென் றிரண்டாம்
போர்சதைய நாள்மாநெற் சும்மையுமுப் பேராம்
பூருவமுன் கிழக்குமா மீரமன்பு குளிர்வாம்
வார்நெடுமை நீர்வானங் கச்சணிக மொழுங்காம்
வாரணஞ்சங் கானைதடை கடல்கோழி பரமாஞ்
சீர்தடிநேர் திருப்பாரந் தாளவொத்துப் புகழாந்
தீர்த்தனே சிவன்குருவாந் தீர்த்தம்விழா நீரே. 453.

நீர்குணமோர் நாட்புனலா மார்வமன்பு நரகா
நிரைபந்தி பசுவாகு மிரையுண்டி யிருப்பாம்
பார்புவிபார் பாரமுமாங் கீரம்பால் கிளியாம்
பாரிவள்ளல் கட்டில்புவி துகில்மனையாள் கனமாம்
எருழவா னழகாகு மோரைபொய்த வில்லாம்
ஏரிகுளம் பிடரியுமாம் வாருணநீர் மேற்காங்
கார்சினநீர் தகர்புயல்போ திருள்கறுப்புக் கூந்தல்
கருங்குரங்கோர்ப் பருவமும்பத் தெனும்பேர்வைத் தாரே

தார்கொடிபூப் படைதொடைகிண் கிணிக்கோவை யொ
சாரங்கஞ் சாதகப்புள் வண்டுமான் மூன்றுந் [மூங்காந்
சூர்துயர்நோ யணங்குபயஞ் சூரணஞ்சா மையுமாந்
சூரைசெடி பிரம்புமாங் காரைசெடி நீறும்
ஆரிரதத் துறுகதிரு மாத்திகூர் மையுமாம்
அரிட்டநோய் கொடிமதுவா மருக்கமெஞ்ச லெருக்கா
பாரதிநா மகள்புனையாம் பூரணிநா யிலவாம் [ம்
பாராவா ரம்பூமி கடலாநா ரியரே. 455.

நாரிசிலை நாறணவு பெண்பன்னா டையுமாம்
நாரமன்பு சைவலநீர் நாரத்தை நான்காம்
வாரிவழி கதவுமதில் கடல்நீப்புச் செல்வம்
வங்கியநீர் கரிக்கூடம் வெள்ளம்வர வெனலாம்
மூரிமுரண் சோம்பெருமை விடைபெருமை நெரிவாம்
முருகெட்டை யறிவிலதாந் திரிமனையாள் மூன்றாந்
காரிவிடஞ் சனிவடுகன் சாத்தன்வள்ளல் மகவான்
கருங்குருவி கருமைகொடி யென்றனராய்ந் தோரே.

தோரைதான் மணிபின்வடம் விரைவுவே யரிசி
துவரையுங்கை வரையுமலை நெல்லுமென வாறும்
மாரிநோய் புயலாண நமன்றூதர் வடுகி
மழைபொழிதல் மாய்வுமது வென்றிவையெட் டாகும்
சூரியோர் வள்ளன்முசு நரிமயிர்நான் காகும்
உயர்பொருன ரேபாணர் கூத்தர்மன்னர் கோவாங்
சோரைகொறுங் கையுமுதுகுங் காளியுமூன் றாகுங்
குராலேகூ கையுநிறமு மென்பரா ரியரே. 457.

ஆரியர்நல் லோர்கலரா மார்ப்பொலிபோர் நகையாம்
அரில்பிணக்குத் தூறுசாம் பொருள்பொருட்சே யுரை
தாரைவழி கண்மழைபா றுடுக்கூர்மை யாறுந் [யாந்
தரணிபார் மலைகதிரா மரைகமலம் விலங்காம்
போர்வைமீக் கோள்கவசந் தோலினுக்கு மாகும்
புரைமறுநேர் துளையுயர்வாம் புரிகயிறார் புரிவாம்
ஊர்நடத்த லூராகு மோரறித லெண்ணு
மோதிரா சியம்யோனி மறைவுட னிராவே. 458.

இராகமிச்சை நிறமிசையாங் கருமைநிறம் வலியாம்
இயற்கட்ட மானைமதச் சுவடுகாக் கையின்பேர்
அராகமிச்சை சிவப்பொடுவெண் ணகமுப்பே ரென்பார்
அறிமருமான் மருமகனும் புத்திரனு மாகும்
பிராணனுயி ருயிர்க்காற்று மரக்கால்கூத் தளவாம்
பெருங்கரண்ட நீர்க்காக்கை யணிகலச்செப் பாகுங்
கீரமே யகத்திமிடாக் கரியின்பல் லடியாங்
கரிசேகு சான்றுதந்தி யிருந்தையும் பராவே. 459.

பராகமலர்த் தாளனுவாம் பரசுமழுத் துதியாம்
பகர்கரண நடங்கல்வி கணித்தல்கா ரணமாம்
துரோணமே சிலைபதக்குத் தும்பைசிம்புட் கொடியாம்
சொற்றிடுங்கா ரம்புபா ழோர்மருந்து மாகும்
கராளமே துன்மார்க்கஞ் நஞ்சமிரு பேராம்
கடுங்குரோட் டென்பதுபன் றியுநரியு மாகுங்
கிராணமே கிரணமூக் கொடுகிரிகித் தலுமாங்
கிளர்க்குஞ்சா ரசநாரை யினிப்பென்னுந் தலமே. 460.

ரகரவெதுகை முற்றும்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[915-வது பக்கத் தொடர்ச்சி]

சழக்கியுஞ் சொல்வதோ நிருபர் தருமமே.

“நங்காய், நின் மூக்கினை வலிந்தவர் கொய்ததற்குக் காரணம் என்னைகொல்” என்று வினவிய இராவணற் கவள், “பேரெழில் பெண்ணொருத்தியின் பொருட்டிது புக்கது” என்னலும், “ஆர் அவள்” என்றவ் வரக்கன் ஆர்வமுடன் கேட்கச் சூர்ப்பணகை சீதையின் நலங்களெல்லாம் விளங்கக் கூறி,

இன்னவ டன்னை யுன்பால்
உய்ப்பலென் றெடுக்க லுற்ற
என்னையவ் விராமன் றம்பி
இடைபுகுந் திலங்கு வாளால்
முன்னைமூக் கரிந்து விட்டான்
முடிந்ததென் வாழ்வு முன்னின்
சொன்னபி னுயிரை நீப்பான்
துணிந்தனெ னென்னச் சொன்னாள்.

உயிர் நீப்பான் துணிந்தனள் என்றிவள் உரைப்பதெல்லாம் பொய். முகத்தொடு பிறந்த தன் மூக்கை உகுத்தபின்னும், வலிய தன் அகத்திடை அழுந்திய ஆசையை உகுத்திலள். இராமனை இன்னுந் தான் எய்தி வாழலாம் என்னும் எண்ணத்தால் இச் சழக்கி உழல்கின்றாள். இதற்கு இரண்டு செய்யுள்களுக்கு முன்

மீன்கொண்டூ டாடும் வேலை
மேகலை யுலக மேத்தத்
தேன்கொண்டூ டாடுங் கூந்தற்
சிற்றிடைச் சீதை யென்னு
மான்கொண்டூ டாடு நீயுன்
வாள்வலி யுலகங் காண
யான்கொண்டூ டாடும் வண்ணம்
இராமனைத் தருதி யென்பால்

[மீன்கள் உகளும் கடலைத் தனக்கு மேகலாபரணமாக உடைய இவ்வுலகத்தவர் ஏத்தும்படி, வண்டுகள் திரியப் பெற்ற கூந்தலையும், சிறிய இடையையும் உடைய சீதை என்னும் மான்போன்ற பெண்ணை நீ மனைவியாகக் கொ

ண்டு கலந்து வாழ்வாய்; மற்று, உன் வாளின் வலிமையை உலகத்தவர் காணும்படி, நான் கலந்து இனிது வாழ்வதற்கு இராமனை எனக்குக் கொடுத்துவிடு]

என்று பண்டமாற்றுச் செய்துகொண்டிருக்கின்றனள் என்பதை, மையல் மீதூரநின்ற இராவணன் மறந்தாலன்றி, "உயிரை நீப்பான் துணிந்தனென்" என்றிங்கு இவள் உரைக்கக் கேட்டுச் சிரிக்காமல் இருக்கமாட்டான். மனத்தின்கண் பொய்யிருக்க நாவானது புரளும் விரைவிது புதுமையன்று.

இன்னவாறு நாடக நவிற்சியின் உண்மைமிகு நயத்தொடு நடக்கும் இச் சிறப்பையெல்லாம், சூர்ப்பணகை சீதையின் எழில்நலங்களை எடுத்துரைக்கும் செய்யுள்களில் கண்டினிது அனுபவிப்பதன் முன், கம்பருக்குக் கையாள நின்ற முதனூலின்கண் இப்பாகம் எவ்வகையில் அமைக்கப்பெற்றிருக்கின்ற தென்பதை நினைவினிற் கொள்வது நலம். வரைகின்றார் வான்மீகி முனிவர்—

"பின்னர், வெகு பரிதாபமான நிலைமையிலிருந்த சூர்ப்பணகை, மந்திரிகள் மத்தியில் உட்கார்ந்திருந்த உலகத்தை அழச்செய்யும் கொடிய பராக்கிரமமுள்ள இராவணனைப்பார்த்து, வெகு கோபத்துடன் பின்வருமாறு சொன்னாள்:-'நீ உன் இஷ்டப்படியெல்லாம் நடந்து, சுகங்களில் ஆழ்ந்து மயக்குற்று, கேட்பவர்கள் ஒருவருமில்லாமல், நினக்குப் பெருங்கேடு வந்துவிட்டதைக் கூட அறிந்துகொள்ளாமல் இருக்கின்றாய். அற்ப போகங்களில் மூழ்கிக் காமத்தில் ஆழ்ந்து அற்பவழியில் நடக்கும் அரசனை அவனுடைய குடிகள், சுடுகாட்டுத் தீயைப்போல, மதிக்கமாட்டார்கள். செய்யவேண்டிய காரியங்களைத் தக்ககாலத்தில் செய்யாத அரசன் தனது நாட்டை அக்காரியங்களுடன் இழந்துவிடுவான். காரியங்களைத் தெரிந்துகொள்ள ஒற்றரை அனுப்பாதவனும், வேண்டிய காலங்களில் குடிகளுக்குத் தரிசனம் கொடுக்காதவனும், தன் சுய புத்தியின்றிப் பிறர்புத்தியின்படி நடப்பவனுமான அரசனைத் தூரத்தில் இருந்துகொண்டே குடிகள், சேறடைந்த ஆற்றை யானை நீங்குவதுபோல், நீங்கி விடுவார்கள். தன் புத்தியால் தன் இராச்சியத்தை ரக்ஷிக்கா அரசன் சமுத்திரத்தில் முழுகிய மலைகள்போல் ஒருபொழுதும் விளங்கமாட்டான். தேவர்கள் தானவர்கள் கந்தர்வர்கள் முதலானவர்களுடைய பகையைச் சம்பாதித்துவைத்துக்கொண்டு அவர்கள் என்ன செய்கிறார்களென்று ஒற்றர்களால் அறிந்துகொள்ளாமல் விஷயசபலமே பெரிதாகக் கொண்டிருக்கும் நீ எவ்வாறு அரசனாகுவாய்? ஓ ராக்ஷச, நீ சிறுபிள்ளைத் தன்மையுள்ளவனும் புத்தி அற்றவனும் அவசியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியவைகளைத் தெரிந்துகொள்ளாதவனுமாய் இருக்கிறாய். ஆயின் நீ எவ்வாறு அரசனாகுவாய்? கொற்றவனே, ஒற்றரும் பொக்கிஷமும் இராசநீதியும் தங்கள் வசமில்லாத அரசர்கள் சாதாரண சனங்களுக் கொப்பாவார்கள். ஒற்றர்களாகின்ற கண்களால் வெகுதூரத்தில் நடக்கும் விஷயங்களை அறிகின்றதனால் அரசர்கள் தீர்க்கதரிசிகளென்று சொல்லப்படுகிறார்கள். நமது சுற்றத்தார் ஜனஸ்தானத்தில் மாண்டதை நீ இன்னும் அறிந்துகொள்ளாதபடியால் உனக்குச் சாரணர்கள் இல்லையென்றும், உன்னைச் சுற்றி உட்கார்ந்திருக்கும் மந்திரிகள் சாமான்யர்களென்றும் நான் எண்ணுகின்றேன். இராமனொருவனால் வெகு கொடிய செயல்கள் புரிந்துவந்த பதினாலாயிரம் ராக்ஷசர்களும் கரனும் தூஷணனும் கொல்லப்பட்டார்கள். அன்றியும், அவன் ரிஷிகளுக்கு அபயம் கொடுத்துத் தண்டகாரணியத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்கி ஜனஸ்தானத்தை அலைத்துவிட்டான். நீ காமவலையில் சிக்கிக்கொண்டு, மதிமயங்கி, பராதீனனாய், உனக்கு என்னகேடு நேர்ந்துள்ளது என்பதை அறியாமல் இருக்கின்றாய். கொடியவனாய், லோபியாய், கள்ளுண்பவனாய், கர்வமடைந்தவனாய், புத்தியீனனாய் அரசாண்டுவரும் மன்னவனுக்குச் சங்கடம் வந்த காலத்தில் உலகத்தார் உதவிசெய்யார்கள். தன்னைப்பற்றி அதிகமாக எண்ணிக்கொள்கிறவனும், நல்வழியில் நில்லாதவனும், தன்னைப்பற்றிப் பெருமையாகக் கருதுகின்றவனும், கோபிக்குங் குணமுள்ளவனுமான அரசனை அவன் சொந்தச் சனங்களே கொன்றுவிடுவார்கள். அவன் சொல்லும் பேச்சை ஒருவரும் கேட்கமாட்டார்கள். அவனைக் கண்டு ஒருவரும் பயப்படமாட்டார்கள். அவன் சீக்கிரம் தனது இராச்சியத்தை இழந்து வறுமை அடைந்து துரும்புக்கு ஒப்பாவான். காய்ந்த கட்டையும் கல்லும் மண்ணும் ஏதாவது பயன்பட்டாலும் படலாம்; தனது பதவியை இழந்த அரசன் ஒன்றுக்கு முதவான். கட்டிக்கழித்த வஸ்திரம் போலவும், கசங்கிப்போன பூமாலைபோலவும் இராச்சியத்தை இழந்த ஒரு மன்னன் ஆற்றலுளனாயினும் ஒரு பொருளாக மதிக்கப்படான். ஆனால், வெகு சாக்கிரதையுள்ளவனாகவும், எல்லாம் அறிந்தவனாகவும், புலன்களை அடக்கினவனாகவும், நன்றியுள்ளவனாகவும், நீதிநெறியில் நடப்பவனாகவும் இருக்கின்றவொரு அரசன் வெகுகாலம் அரசாளுவான். கண்களை மூடிக்கொண்டு தூங்கினபோதிலும், நீதியாகின்ற கண்களை விழித்திருப்பவனும் தன்னுடைய கோபங்களின் பலன்களை யாவரும் அறியவைப்பவனுமாகிய அரசன் எல்லாராலும் மதிக்கப்படுகின்றான். இராவணா, அரக்கர்களுக்குண்டாகிய நாசத்தை ஒற்றர்களால் அறிந்துகொள்ளாத நீ துற்புத்தியுள்ளவன்; நற்குணங்களொன்றும் இல்லாதவன். மற்றவரை அவமானம் செய்துகொண்டு, காமத்தால் கவரப்பட்டு, காலமும் இடமு மறிந்து செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாது, குணங்களையும் தோஷங்களையும் பகுத்தறியாதிருக்கும் நீ உனது இராச்சியத்தை இழந்து விரைவில் அழிவடையப்போகின்றாய்" இவ்வண்ணம் சூர்ப்பணகை தனது குற்றங்களை எடுத்துரைக்க, அரக்கர் வேந்தனாகிய இராவணன் அவைகளைப் பற்றி நினைத்து, தனது செல்வத்தையும், செருக்கையும், சேனையையும் சீர்தூக்கி, கொஞ்சநேரம் தனக்குள்ளேயே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

இவ்வாறு சூர்ப்பணகை சபைநடுவே கொடிய சொற்களைச் சொல்ல, இராவணன் கோபங்கொண்டு, அவளை நோக்கி, "இராமன் என்பவன் யார்? அவன் பராக்கிரமம் என்ன? அவன் உருவம் எப்படிப்பட்டது? அவன் வீரியம் எத்தன்மையது? என்ன காரணத்தால் ஒருவராலும் நெருங்கமுடியாத தண்டகாரணியத்துக்கு அவன் வந்திருக்கின்றான்? அவன் எந்தவித ஆயுதங்களைக் கொண்டு இத்தனை ராக்ஷசசேனைகளையுங் கரதூஷண திரிசிரரர்களையுங் கொன்றான்?" என்று வினவினான். இன்னவாறு அரக்கர் மன்னவனான இராவணன் கேட்கச் சூர்ப்பணகை வெகு கோபத்துடன் தான் கண்டபடி இராமருடைய பராக்கிரமத்தைப் பற்றிச் சொல்லத்தொடங்கினாள்:-"தசரதகுமாரனான இராமன் நீண்ட கைகளும் விசாலமான கண்களுமுடையவன்; மரவுரியு மான்றோலு முடுத்தவன்; மன்மதன் போல் உருவமமைந்தவன். அவன் பொற்பூண் பூண்ட இந்திரதனுசுபோன்ற தனது வில்லை நாணேற்றி, மகா விஷமுள்ள சர்ப்பங்களுக்கொப்பான கூர்மையான பாணங்களைத் தொடுக்கிறான். அவன்யுத்தத்தில் வில்லை வளைப்பதை நான் காணவில்லை; சரமாரியால் அரக்கர்சேனைகள் மாண்டு விழுவதைமட்டுமேநான் கண்டேன். கல்மழையால் இந்திரன் பலிதாமன பயிர்களை அழிப்பதுபோல, இராமன் ஒருவன் பாதசாரியாக நின்றுகொண்டு பயங்கரமான உருவம் பொருந்திய பதினாலாயிரம் அரக்கர்களையும் தூஷணனுடன் கரனையும் ஒன்றரை முகூர்த்தகாலத்தில் கூரிய பாணங்களால் கொன்றான். அவன் ரிஷிகளுக்கு அபயங்கொடுத்தான்; தண்டகாரணியத்துக்கு க்ஷேமத்தை

யுண்டாக்கினான். மகாத்துமாவாகிய இராமன் பெண்கொலை பழியெனக்கருதி என்னை அவமானப்படுத்தி உயிர்தப்பி ஓடவிட்டான். அவன் தம்பி வெகு பராக்கிரமும் அவனுக்கொப்பான சவுரியமு முள்ளவன்; இராமனிடத்து அதிக அன்பும் பக்தியு முடையவன். அவன் பெயர் லக்ஷ்மணன். அவன் மிக்கவீரன்; குற்றத்தைச் சற்றேனுஞ் சகியாதவன்; ஒருவராலுஞ் ஜெயிக்கமுடியாதவன்; எல்லாரையும் ஜெயிக்கவல்லவன்; அதிகபராக்கிரமமும் புத்தியும் வலியு முடையவன்; அவனை இராமனுடைய வலக்கையென்றும், புறத்திற் சஞ்சரிக்கும் உயிர் என்றும் சொல்லலாம். விசாலமான கண்களும், பூரண சந்திரனைப் போன்ற முகமும் உடைய இராமனது அரிய மனைவி அவனுடைய நன்மையையே எப்பொழுதும் நாடியிருப்பவள். அழகிய கூந்தலும், அழகிய மூக்கும், அழகிய துடையும் உடைய அந்தத் தையல் தண்டகாரணியத்திற்கு ஒரு தேவதைபோலவும், மற்றொரு லக்ஷ்மிபோலவும் விளங்கிக்கொண்டிருக்கிறாள். பொன்போன்ற மேனியும் சிவந்து உயர்ந்த நகங்களும் உடைய அந்த அழகுடையாள் பெயர் சீதை. அம் மெல்லிய இடையை யுடையவள் விதேகராஜனுடைய குமாரி. அவ்வளவு அழகுவாய்ந்த தேவப்பெண்ணையாவது, கந்தர்வப்பெண்ணையாவது, யக்ஷ கன்னியையாவது கின்னரியையாவது, நான் இவ்வுலகத்தில் கண்டதேயில்லை. எவனுக்குச் சீதை மனைவியோ, எவனைச் சீதை சந்தோஷத்தோடு தழுவுகிறாளோ, அவனுடைய பாக்கியம் இவ்வுலகத்தில் இந்திரனுடைய பாக்கியத்துக்கு மேலானது. அவ்வளவு நல்நடக்கையும், தேகத்தின் வனப்பும், நிகரற்றொளிரும் காந்தியுமுள்ள அவள்தான் நினக்குச் சரியான மனைவி. நீதான் அவளுக்குச் சரியான கணவன். அம் மடந்தையை நின்னுடைய மனைவியாக்க வேண்டுமென்று எடுத்துவர நான் முயன்றேன். வலிய புயங்களையுடையானே, அதற்காகத்தான் கொடிய லக்ஷ்மணன் என்னை இவ்வாறு அங்கபங்கம் செய்தான். பூரண சந்திரனுக்கொப்பான முகமுடைய அச்சீதையைக் கண்டால் அதுமுதல் மன்மதபாணங்களால் நீ மிகவும் வருந்துவாய். அவளை மருவவேண்டுமென்ற இஷ்டமிருந்தால் உடனே தானே வெற்றியடையும்பொருட்டு வலக்காலைத் தூக்கி வைத்துநட. காட்டில் வசிக்கின்ற இராமனைக் கொன்று மாண்டொழிந்த அரக்கர்களுக்கெல்லாம் திருப்திபண்ணிவை. உன்னுடைய கூரிய பாணங்களால் இராமனையும் மகாரதனான லக்ஷ்மணனையுங் கொன்று கணவனையிழந்த சீதையை மணஞ்செய்துகொள். அரக்கர்தம் வேந்தே, நான் சொல்லுவது நினது மனத்திற் கொத்திருந்தால் உடனே நான் சொல்லும் வண்ணம் நட. அவர்கள் வலிமையையும் உன்னுடைய பலத்தையும் சீர்தூக்கிப்பார்த்து அப்பெண்ணைப் பலாத்காரமாகக்கொண்டுவந்துவிடு. அவயவக் குற்றங்கள் ஒன்றுமில்லாத அழகிய சீதையே உனக்கேற்ற மனைவி. இராமன், தனது கொடிய பாணங்களால், ஜனஸ்தானத்திலிருந்த அரக்கர்கள் எல்லாரையும் வதைத்ததைக் கேட்டும், கரதூஷணர்கள் மாண்டதைக் கண்டும் நீ எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமோ அவ்வாறு நடந்துகொள்."

* * *

இராவணனுக்குக் கோபமூட்டித் தன் பழியைத் தீர்த்துக் கொள்ள வான்மீகத்தினுள் புகுந்த சூர்ப்பணகை இங்குக் கம்பர் நூலில் இராவணனுக்குக் காமமூட்டித் தன் ஆசையை அடைய முயல்பவளாய் மாறுகின்றாள். அங்கும் காமம் உளது, இங்கும் கோபம் உளது; எனினும் எதனைக் கீழ்ப்படுத்தி எதனை மேலேற்றுவது என்பதனைத் தேர்ந்து புனைவதே கலையின் கைவந்த திறம். வெஞ்சினம் மூளும் பொருட்டு இராவணனுக்கு இராஜ தர்மங்களின் நுட்பத்தை மூக்கிழந்த அத்தங்கை ஊக்கமுடன் உரைப்பது, அத்தருமத்தின் பரிபவத்தையே பரிகசிப்பதற்கோ, அல்லது பின்னாள் உதிட்டிரனுக்கு இவைகளை உரைக்கநின்ற வீடுமனையே முன்னரே வென்றுவிடவேண்டுமெனும் ஒருபெரு நசையினாலோ—யாரறிவார். இருநூலிலும் சூர்ப்பணகை, இராமன்றன் வலியைச் சொன்னாள், சீதையின் எழிலைச் சொன்னாள்; மற்று, தமிழ்நூலினுள் இக்கயத்தி, ஒற்றூடி உழைக்கின்றவொரு அரசியல் முறையைத் தனக்கு உதவியாய்த் தேடப் புக்கிலள். இந் நன்றி கருதி, அவன் கேட்டவண்ணம், இராமனையே அவளுக்குப் பரிசளிப்பினுந் தகும்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[912-வது பக்கத் தொடர்ச்சி]

ப்ரூட்டஸ்:—நல்விடை கொள்க நீ — நீயும் — நீயும் வலூம்னியஸ் (1)—ஸ்ட்ராட்டோ, இதுகாறும் நீ நித்திரை செய்திருந்தாய், நினக்கும் ஸ்ட்ராட்டோ, நல்விடை யளிக்கின்றேன்—சுகிதகொள், எனக்கு உண்மையாயிருந்தாரன்றி ஒருவரையும் யான் என் வாழ்நாளடங்கலுங் கண்டிலேன் என்பதை யுன்னி என் னிதயம் களிமிகக் கூர்கின்றது (2). ஆக்டேவியஸ்ஸும் மார்க் ஆண்டனியும் இவ்விழிதகை வெற்றியால் எய்துவதைக் காட்டிலும், இழக்கும் இந்நாளினால் நான் அதிகமும் பெருமை அடைந்தவனாவேன் (3). இனி, எல்லோரும் ஒருங்கே விடைகொள்மின். ப்ரூட்டஸின் நாவானது அவன் வாழ்க்கைச் சரிதத்தை இதோ முடித்துவிடும். (4) என் கண்கள்மீது கங்குல் தொங்குகின்றது; (5) இக் கடிகையை அடைவதற்கே நெடிதுழைத்த என் என்புகளும் இனி இளைப்பாறவேண்டுகின்றன (6).

(1) பிரிவதன்முன் ப்ரூட்டஸ் நல்விடை கொடுக்கின்றான். இனிச் சந்திப்பாமோ என்னும் இரக்கமும் இதனில் அடங்கியிருக்கின்றது.

(2) இதுகாறும் என்னுடன் சேர்ந்தவர்கள் எல்லாரும் எக்காலத்தினும் எனக்கு உண்மையாக இருந்தனரேயன்றி என்னைக் கைவிட்டவர் ஒருவரும் இல்லை என்பதை நினைத்துப் பெரிதும் இப்பொழுது மகிழ்கின்றேன்-என்பது பொருள்.

(3) அவர்கள் ஜயித்துப் பெற்ற பெருமையைக் காட்டிலும் நான் தோற்றுப் பெறும் பெருமை உயர்ந்தது—என்கின்ற ப்ரூட்டஸ் அதற்குக் காரணம் யாதென்பதைக் கூறவில்லை. தோற்பவர் அனைவரும் இப்படித்தான் பகைவர் பெற்ற வெற்றியை, 'இழிதகை வெற்றி' என்று பழிக்கின்றனர்.

(4) ப்ரூட்டஸ் தன்னையே படர்க்கையில் பேசுகின்றான். "இவ்வுரையோடு என் வாழ்நாள் முடிய நிற்கின்றது"—என்பது பொருள்.

(5) கங்குல்-இருள், இரவு. கண்கள்மீது கங்குல் தொங்குகின்றது - கண்மூடிச் சாவதற்கே காத்திருக்கின்றேன்.

[ஆரவாரம்—ஓடுங்கள், ஓடுங்கள் ஓடுங்கள், என்ற கூக்குரல் உள்ளிருந்து கேட்கின்றது.]

க்ளைட்டஸ்:—விரைக, விரைக,என் பெரும, விரைக.

ப்ரூட்டஸ்:—செல்க, யான் பின்வருவேன்.

[க்ளைட்டஸ்ஸூம், டார்டேனியஸ்ஸூம், வலூம்னியஸ்ஸூம் போகின்றனர்]

ஸ்ட்ராட்டோ,நின் தலைவனுடன் சற்றே நிற்பாயோ நீ (7). நன்மதிப்புடையவன் நீ. உன் வாழ்க்கையில் மானத்தின்பால் ஒரு பற்று இருந்திருந்தது (8). என் கத்தியை ஏந்தி,யான் அதன்மீது பாயுங்கால், உன்முகத்தினை மறுபுறம் திருப்பிக்கொள். செய்வாயோ ஸ்ட்ராட்டோ. (9)?

ஸ்ட்ராட்டோ:—முதல் உன் கையினைக் கொடு: என் பெரும, நின்பால் விடைகொள்கின்றேன் (10).

ப்ரூட்டஸ்:—செல்கின்றேன், நல்லவென் ஸ்ட்ராட்டோ - ஓ ஸீஸர், இனி நீ அலையவேண்டா, இதனிலொருபாதி இட்டமுடன் யானுன்னை வெட்டினேனல்லேன் (11).

[கத்தியின்மீது பாய்ந்து மாய்கின்றான்]

[ஆரவாரம்—தன் சேனைகளுடன் ஆக்டேவியஸ்ஸூம் ஆண்டனியும் வருகின்றனர். மஸ்ஸாலாவும், லூஸிலியஸ்ஸூம் உடன் வருகின்றனர்]

ஆக்டேவியஸ்:—யாவன் அவன்?

மேஸ்ஸாலா:-என் தலைவன்றன் ஏவலாளன். ஸ்ட்ராட்டோ, உன் தலைவன் எங்குளன்?

ஸ்டாராட்டோ:—நீ இருக்கும் தளைநின்று தப்பியுளன், மெஸ்ஸாலா (12); கொற்றமுடன் வருபவர் இனியவனைக் கொளுத்தத்தான் கூடும். தானேதான் தன்னை வென்றுகொண்டனன் ப்ரூட்டஸ். அவன் மரணத்தில் வேறெவனுக்கும் பெருமையில்லை (13).

லூஸிலியஸ்:—இப்படியே ப்ரூட்டஸ் காணப்படுதல் வேண்டும். ப்ரூட்டஸ், லூஸிலியஸ்ஸின் மொழிகளை மெய்ப்பித்த உனக்கு மிக்க வந்தனம்.

ஆக்டேவியஸ்:—ப்ரூட்டஸிற்குப் பணிசெய்தோரனைவரையும் எனது ஏவலில் அமர்த்திக்கொள்வேன். ஏடா, இனி உன் காலத்தை என்னுடன் கழிப்பாயோ?

ப்ரூட்டஸ்:—மெஸ்ஸாலா என்னை நின்சார்பு சேர்ப்பாயின், உடன்படுவேன். (14).

ஆக்டேவியஸ்:—இது செய்க நீ, மெஸ்ஸாலா.

மேஸ்ஸாலா:—என் தலைவன் இறந்ததெவ்வாறு, ஸ்ட்ராட்டோ?

ஸ்ட்ராட்டோ:-கத்தியை நான் ஏந்திக்கொள்ள, அதன்மீதவன் பாய்ந்தனன்.

மேஸ்ஸாலா:—ஆயின், என் தலைவனுக்கு இறுதிக்கடன் ஆற்றிய இவனை நீ ஆக்டேவியஸ், உன் திறத்தில் அழைத்துக்கொள்க.

ஆண்டனி:—அவர் அனைவரிலும் தலைசிறந்த உரோமன் இவன். இவனைத் தவிர, சதியாளர் அனைவரும் தாம் செய்ததை,மாபெரும் ஸீஸரின்பால் கொண்டவோர் அவ்வியத்தால் செய்தனர். இவன்மட்டுமே, நல்லதொரு நினைவுடன் எல்லோர் நலமும் பொதுவுறக் கருதி அவர்களில் ஒருவனாயினன். செவ்விய அமைதி வாய்ந்தது இவன் வாழ்க்கை.

(6) கடிகை - நாழிகை, வேளை. "நான் உழைத்ததெல்லாம் இப்படி அழிவதற்கே போலும்; இனி மாய்ந்து நான் இளைப்பாறுவேன்"—என்பது பொருள்.

(7) மற்றவரை அனுப்பியபின் ப்ரூட்டஸ் தன் ஏவலாளன் ஸட்ராட்டோவை மாத்திரம் தன்னுடன் நிறுத்திக்கொள்கின்றான்.

(8) நீ கௌரவமுடையவன். மானத்தின் தன்மையையும் அறிந்தவன்—என்பது பொருள்.

(9) காஸ்ஸியஸ்ஸைப் போலவே ப்ரூட்டஸூம் தன் ஏவலாளன் கையிற் கத்தியைக் கொடுத்து அதனால் மாய்கின்றான்.

(10) ப்ரூட்டஸ் நீட்டிய கரத்தினைப் பரிவுடன் பற்றி ஸ்ட்ராட்டோ கூறிய பிரிவுமொழி யிது.

(11) "ஓ ஸீஸரே, நான் இப்பொழுது எவ்வளவு இஷ்டமுடன் சாகின்றேனோ, அதனிற் பாதிகூட நானுன்னைக் கொல்வதில் கொண்டிருக்கவில்லை. நன்று, நான் சாவதுடன் உன் பழி தீர்ந்துவிடுகின்றதாதலால் இனி நீ ஆவி உருவமாய் அலையாமல் அமைதிகொள்ளலாம்"—என்பது பொருள்.

இப்பொழுது ஆக்டேவியஸ்ஸூடன் சேர்ந்து ஆண்டனி வென்றானாலும் பின்னாள் இவன் சரித்திரமும் இப்படியே அவலமாய் முடிகின்றது. ஆக்டேவியஸ்ஸிற்கும் ஆண்டனிக்கும் பகையுண்டாகி விளைந்த போரில், ஆண்டனி தோல்வியடைய, அவனும் இப்படியே தன் நண்பன் ஒருவனையழைத்துத் தன்னைக் கொல்லும்படி சொல்கின்றான். அவன் "நின் முகத்தை நோக்கிக்கொண்டே குத்துவதற்கு எனக்கு மனம் துணியவில்லையாகையால், முகத்தைத்திருப்பிக்கொள்" என்றுகூறி,ஆண்டனி திரும்பியதும் அவன் தன்னையே குத்திக்கொண்டு சாகின்றான். பிறகு ஆண்டனியும் தன் கத்தியின்மீது பாய்ந்து மாய்கின்றனன். இது ஷேக்ஸ்பியர் எழுதிய ஆண்டனியும் க்ளியபாட்ராவும்" என்னும் வேறோர் நாடகத்தில் காணப்படும்.

(12) நின்னைப்போல் பகைஞர் கையில் அகப்படாமல் தப்பிவிட்டான் ப்ரூட்டஸ்—என்பது பொருள்.

(13) ப்ரூட்டஸ்ஸைக் கொன்றேன் நான் என்ற பெருமை எவனுக்கும் வாய்த்திடாது.

(14) "என் திறத்தில் இணைச் சேர்ந்துகொள்வாயா" என்று ஆக்டேவியஸ் கேட்கவும், மெஸ்ஸாலா சம்மதித்தால் தான் அதற்கு உடன்படுவா னென்று ஸ்டராட்டோ கூறுகின்றான்.

(15) ஆண்டனி இவ்வண்ணம் ப்ரூட்டஸைப் பாராட்டிப் பேசுகின்றான். அவ்வியம் - பொறாமை. அவர் அனைவரிலும் - ஸீஸரைச் சதிக்கொலை செய்தவர்கள் அனைவரிலும்.

ஆண்டனி இங்கு ப்ரூட்டஸைப் பற்றிக் கூறிய புகழ்மொழிகளை ஆதாரமாகக்கொண்டு, ஷேக்ஸ்பியர் நூலாராய்ச்சி வல்லுனர் அனைவரும், ஒருவாயாய், "ப்ரூட்டஸ் இயற்கையில் மிக்க நல்லவனென்றும், காஸ்ஸியஸ்ஸே அவன் மனத்தை ஸீஸருக்கு விரோதமாகத் திரித்துவிட்டனன் என்றும், ஸீஸர் முடிதரித்தால் வல்லரசாகிக் குடிகளின் உரிமைகளைச் சிதைத்து அடிமைகளாக்கிவிடுவான் என அஞ்சி, உரோமாபுரி வாசிகளுக்கு அக்கதிவாராதிருக்கவேண்டுமென்னும் ஒரு பொதுநலத்தைக் கருதியே ஸீஸரைக்கொல்ல உடன்பட்டானல்லாது, மற்றவரைப்போல் பொறாமையாலேனும் தான் அந்த ஸீஸரின் பதவியை அடையவேண்டுமென்னும் பேராசையினாலேனும் இவன் தூண்டப்பெறவில்லை யென்றும்," வாதிக்கின்றனர். இவ்வாதத்திற்கு ஆதாரமில்லை என்று இங்கு முன் அவ்வப்போது காட்டியிருக்கின்றோம். "ஆண்டனி இப்படிச் சொல்கின்றானே, அவன் அறியானோ"—என்னின், ஆண்டனியை நம்பலாகாது, அவன் பொய்யன்; ஸீஸரின் பழியைத் தீர்க்கவேண்டுமென்ற நட்பின் தூய்மையால் ப்ரூட்டஸிற்கு மாறுகப்பொருதவன் போல்தோன்றினும், உண்மையில் ஆட்சியைத் தான் கைப்பற்றுவதற்கே அவாவினன் என்பது 4-ம் அங்கம் 1-ம் களத்தில் தெரியவருகின்றது. ப்ரூட்டஸோ இறந்துவிட்டான். இனியும்

இயற்கைத் தெய்வம் தலைநிமிர்ந்து நின்று, "ஒரு தனி மனிதன் இருந்தனன் இவனே" என்று உலகிற்கெல்லாம் உரைக்கும்வண்ணம் குணங்களனைத்தும் செவ்விதின் இவன்வயின் கலந்திருந்தன.(15)

ஆக்டேவியஸ்:—அவன் பெருமைக்கேற்றவாறு, கண்ணியங்காட்டி, ஈமச் சடங்குகள் ஆற்றி அவனை நாம் பாராட்டுவோம். வீரனுக்குரிய கௌரவங்களுடன் அவனது உடலம் இன்றிரவு என் கூடாரத்தில் இருக்கட்டும்—இனி, களத்தினை இளைப்பாற அழைத்திடுக. இந் நன்னாளின் பெருமைகளைப் பகிர்ந்துகொள்ள நாம் செல்வோம்.

[போகின்றனர்.]

அவனைப் பழிப்பதால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. புகழ்வதிலோ காரிய மிருக்கின்றது. இதனால் ப்ரூட்டஸிற்கு நண்பராயிருந்தவர்கள் ஆண்டனியைக் கொண்டாடி அவனுடன் ஆழ்ந்த நட்புடையவர்களாகலாம். இவ்வகையில் இவன் கட்சி வலிவடையும். ப்ரூட்டஸை வெல்வதற்கு, லெபிடியஸ்ஸையும் ஆக்டேவியஸ்ஸையும் துணைசேர்த்துக்கொண்டானாலும், வென்றபின், அவர்களை அடக்கிவிட்டுத் தானே தனியர சாளவேண்டுமென்னும் எண்ணமுடையவன் இவன் என்பதை நினைத்துப்பார்த்தால், பின்னாள் பயன்படும்படி ப்ரூட்டஸின் நண்பர்களைத் தன் நண்பர்களாக்கிக்கொள்வதற் குரியவோர் இராஜதந்திரமே இது என்பது தெரியவரும்.

நாடகம் முற்றிற்று.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள்:

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0



தைலங்கள்:

சந்தனாதி	6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக	"	0-12-0
பிருங்காமலக	"	0-12-0
ஸ்திரீகளுக்கு		
ஸுதக டானிக்		2-0-0
கர்ப்பாசய டானிக்		2-0-0
ப்ரஸவ லேகியம்		1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யாவனப்ராச I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. டி. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றமணக்கு எண்ணெய்
காஸ்ட்ராலகஸ்

ஜ்வரேக்
எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸூடன் ஆர்டர் செய்யவும்.]

திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புதுநூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்வானாய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ௩௩ பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், குவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, 20,காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர்,சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM c.c.s.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM
Purasawalkam, Madras.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 5. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு மூயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபோர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ப்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை பெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முக்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்.

ரப்பர் ஆடை:—அமெரிக்காவில் ஒரு கம்பெனியார் ரப்பரினால் ஆடை தயாரித்து வருகின்றனர். சாதாரண பஞ்சுநூல் ஆடைகளைக் காட்டிலும் இந்த ரப்பர் ஆடைகள் விலை குறைவானது. நூல் ஆடைகளைக் காட்டிலும் அதிக நாள் உழைக்கவல்லது. அமெரிக்காவில் வாரத்திற்கு லட்சம் பவுன் மதிப்புள்ள ரப்பர் ஆடைகள் செலவாகின்றன.

***

ஆகாரக்கணக்கு:—நல்ல திடகாத்திரம் படைத்த ஒருவன் அவனது 70 வயதிற்குள் எவ்வளவு ஆகாரம் சாப்பிட்டிருப்பான் என்று ஒரு பிரான்ஸ் தேசத்து வைத்திய நிபுணர் ஒரு கணக்கெடுத்திருக்கின்றார். 70 வயதுள்ள ஒரு மனிதன் எவ்வளவு இடையிருக்கின்றானோ அதைக் காட்டிலும் 700 மடங்கு அதிக நிறையுள்ள ஆகாரத்தை அவன் புசித்திருப்பானாம். 70 வயதுள்ள ஒருவர் அவர் ஜீவியகாலத்தில் 13 டன் சாதம் 15 டன் மரக்கறி, 7 டன் இறைச்சி, 7 டன் பழவர்க்கங்கள், 16000 ராத்தல் சர்க்கரை, 15000 படி பால், 20000 படி தண்ணீர் குடித்திருக்கவேண்டும் என்று அந் நிபுணர் கூறுகின்றார்.

***

போலிப் பொன் சாமான்கள்:—இங்கிலாந்தில் ஷெப்பீல்டு என்னுமிடத்தில் இரும்பு வியாபாரம் செய்து வரும் டப்ளியு டர்னர் கம்பெனியார் துத்திநாகம் செம்பு என்னும் இரு லோகங்களையும் கலந்து பொன் போன்ற ஒருவித லோகம் செய்திருக்கின்றனர். இந்தப் புதுலோகத்தினால் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. இவை தங்கத்தைப்போலவே இருக்கின்றன. இப்பாத்திரங்கள் இங்கிலாந்தில் விற்பனையாய் வருகின்றன.

***

சன்மார்க்கம்:—நியூயார்க்கில் உள்ள 'டான்' என்னும் பத்திரிகையில் அலிஸ்பெயிலி என்னும் சீமாட்டி எழுதிய ஒரு கட்டுரைச் சுருக்கம்:—

நாம் உழைக்கவேண்டுவது ஆன்மாவின் திருப்திக்கா அல்லது உலோகாயத ஆக்கத்திற்கா? கடவுளின் இருதய ஆலயத்திலிருந்து நாம் உலகம் வந்தடைந்தோம். வந்த நாம் அவன் திருவடியையே நாடவேண்டும். நம் கண்ணிற்குத் தெரியாமல், மனித சஞ்சாரமற்ற விடங்களில் சான்றோர் பலர் இருக்கின்றனர். அவர்களை நாம் தேடி அடைந்து சன்மார்க்க நெறிபற்றிக் கடவுளை எய்தவேண்டும். நாம் செய்கின்ற லோகாயத முயற்சியெல்லாம் பயனற்றவை. நாம் பிறந்தது அதற்கன்று.

***

பர்மாத் தேர்தல்:—பர்மாச் சட்ட சபைத் தேர்தலில் பர்மாவை இந்தியாவினின்று பிரித்துவிடவேண்டுமென்னும் கட்சியாரும், பிரிவினை வேண்டாம் என்னும் கட்சியாரும் ஸ்தானம்பெற நின்றனர். இறுதியில் பிரிவினை வேண்டாதார் வெற்றிபெற்றனர் என்று தெரிகின்றது.

***

அதிசயப்பெண்:—ஜெர்மனியில், பவேரியாவென்னுமிடத்தில் ஒரு சிறு கிராமத்தில் தெரிசா நூமான் என்னும் பெயருடைய பெண் இருக்கின்றார். அப்பெண்ணிற்கு ஞானதிருஷ்டியும் தெய்விகசக்தியும் இருக்கின்றன. ஜனங்கள் அப்பெண்ணைக் காண்பதற்கு அக்கிராமத்திற்கு வாரந்தோறும் செல்கின்றனராம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும், அப்பெண்ணின் சரீரத்தில் ஒரு மச்சம் தோன்றி மறைகின்றதாம்.

சாதாரண தினங்களில் அப்பெண் தனது வீட்டிலுள்ள தோட்டத்தில் வேலை செய்வதுடன், அருகிலுள்ள கோயிலுக்கும் சென்று பிரார்த்தனை செய்வது வழக்கமாக இருந்துவருகின்றது. 1927-ம் வருஷம் அப்பெண்ணை டாக்டர்கள் பரிசோதனை செய்து இரவுபகலாக அப் பெண்ணுடன் கூடவே இருக்கும்படி நாலு தாதிகளை நியமித்தனர். ஆயினும் அந்த மச்சத்தின் மர்மம் என்ன வென்பது ஒருவருக்கும் புலப்படவில்லை. அப்பெண்ணின் சரீர அமைப்புச் சாதாரண மனிதர்களைப்போல் இருக்கின்றதெனினும், அவள் உணவு சாப்பிடுவதில்லை. இத்தகைய ஆச்சரியகரமான சிருஷ்டிக்கு டாக்டர்கள் காரணம் கூற முடியவில்லை. இதைத் தவிர அப்பெண்ணைப் பரிகாசம் செய்வதற்காக வந்த ப்ராடஸ்டண்ட் கிறிஸ்துவர்கள் யூதர்கள் முதலியோர், அந்தப்பெண்ணை நேரில் கண்டதும் பிரார்த்தனை செய்து வணங்க ஆரம்பித்து விட்டார்கள். இச்சம்பவம் எல்லோருக்கும் மிகுந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அப்பெண்ணின் நிலைமையைப்பற்றி யோசிப்பதற்காகப் பாதிரிமார்கள் அடங்கிய கூட்டமொன்று நடந்தது. அப் பெண்ணை நாலு வாரம்வரையில் ஓர் ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை செய்யவேண்டுமென்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அப் பெண்ணின் சரீரத்தில் ஏற்படும் மச்சத்தின் மர்மத்தை நிபுணர்களான டாக்டர்களால் தெரிந்துகொள்ளலாமென்று கருதுகின்றனர்.

***

ஜனனக் கட்டுப்பாடு:—விசாகப்பட்டணத்தில் ஜஸ்டிஸ் ராமேசம் பந்துலு அவர்கள் செய்தவொரு உபந்நியாசத்தில் இந்தியாவில் ஒரு சதுரமைலுக்கு 245 பேர் இருக்கின்றனர் என்றும், நாளுக்குநாள் விருத்தியாகும் விளைபொருள்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக ஜனத்தொகை பெருகலாகின்றது என்றும், தற்காலப் பஞ்சத்திற்கும் பொருளாதார நெருக்கடிக்கும் காரணம் இந்த ஜனத்தொகை வளர்ச்சியேயென்றும், எனவே ஜனனக் கட்டுப்பாட்டு முறையை இந்தியர் கைப்பற்றாவிடில் மக்களும் நாகரிகமும் மிகச் சிறிய காலத்திற்குள் நசித்துவிட நேரிடும் என்றும், இவ்விஷயத்தை வருங்கால மக்களான மாணவர்கள் கவனிக்கவேண்டுமென்றும், உணவு முறையும் ஜனன விஷயமும்தான் இந்தியர் கவனத்தைப் பற்ற வேண்டிய முக்கியமான விஷயங்கள் என்றும் கூறியுள்ளார்.

***

ஆந்திரமாதர் மஹாநாடு:—ராஜமந்திரியில் கூடிய ஆந்திரநாட்டு மாதர் மஹாநாட்டில் செய்யப்பெற்ற தீர்மானங்கள்:—பெண்களுக்குக் கட்டாய ஆரம்பக் கல்வி கொடுக்கப்படவேண்டும். பெண்களுக்கென்று ஆந்திர சர்வகலாசாலையார் ஓர் உயர்தரக் கல்லூரியை நிறுவவேண்டும். சொத்துரிமை கொடுக்கவேண்டும். அரசியல் அதிகாரம் வேண்டும். சாரதாச் சட்டத்தை நடத்துவதில் கண்டிப்பான முறைகள் கையாளப்பெற வேண்டும். விதவைகளுக்குப் புருடனது சொத்து உரிமையாக வேண்டும். பெண்களுக்கு என்று ஒரு தனி ஆயுர்வேத வயித்திய கலாசாலைவேண்டும். கல்யாண ரத்துச் சட்டம் செய்து [illegible]டிமைத்தனத்தை அகற்றவேண்டும்.

188982

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆசியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மாருவலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.

ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.

ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 328, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :

NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)